Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 மாசி 1 வெள்ளிக்கிழமை (13-02-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 68

## வீடு பார்க்கச் சென்றோர் மீது படையினர் பதுங்கியிருந்து தாக்கு

### மூன்று முறிப்புச்சந்தியில் இருவர் பலி; இருவர் படுகாயம்

வவுனியா, பெப். 13

மாங்குளம் பகுதியில் வீடு பார்க்கச் சென்ற பொதுமக்கள் மீது மூன்று முறிப் புச் சந்தியில் பதுங்கியிருந்த இராணுவத் தினர் நடத்திய தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர்: இருவர் படுகாய மடைந்தனர்.

நேற்று முன்தினம் மாலை 3 மணியள வில் லாண்ட்மாஸ்ரர் ஒன்றில் 6 பொது மக்கள் மூன்று முறிப்புச்சந்தியூடாக மாங் குளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வர்.

அச்சமயம் அப்பகுதியில் பதுங்கியிருந்த படையினர் அவர்கள் மீது தாக்குதல் நடத் தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தம்பலகமம் கொலை சூத்திரதாரி அடையாளம் காணப்பட்டார்

திருகோணமலை, பெப். 13

திருகோணமலை மாவட்டம் தம்பலகமம் பாரதிபுரத் தில் எட்டுத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத் தில் சூத்திரதாரியென கருதப்படும் பாரதிபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் ரணராஜ பண்டார நேற்றைய அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட் டப்பட்டார்

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் பதில் நீதி வான் சுபாஜினி வரதன் முன்னிலையில் இரண்டாவது நாளாக நேற்று அடையாள அணிவகுப்பு நடந்த போது, இன்ஸ்பெக்டர் ரணராஜா பண்டாராவுடன் மேலும் இரு பொலிஸாரையும், இரு ஊர்காவலரையும் சாட்சிகள் அடை யாளம் காட்டினர்.

இந்த சம்பவம் தொடர்பாக கைதான 6 பொலிஸார், 5 ஊர்காவலர் ஆகியோரில் இதுவரை 5 பொலிஸார் 4 ஊர் காவலரும் அடையாளம் காணப்பட்டனர்

ஏனைய இருவர் தொடர்பான அடையாள அணிவகுப்பு இன்று நடைபெறும்.

(இ-3)

# மாங்குளம் நோக்கி படை நகர்வு ஆரம்பம்

## புலிகளின் எதிர்ப்பு குறைவு

வவுனியா, பெப்ரவரி 13

கனகராயன்குளம் கரிப்பட்டமுறிப்புப் பகுதியில் இருந்து மாங்குளம் நோக்கிப் படையினர் நகர்வை ஆரம்பித்துள்ள தாக வவுனியாத் தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகளின் எதிர்த் தாக்குதல்கள் குறைவாக இருப்பதாகவும் —

இடை இடையே ஷெல் தாக் குதல்களைப் படையினர் மீது மேற்கொள்வதாகவும் — தெரி விக்கப்பட்டது.

கடந்த மே மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமான "வெற்றி உறுதி" இராணுவ நடவ டிக்கை இன்று ஒன்பது மாதங் களைப் பூர்த்தி செய்கிறது.

மாங்குளத்துக்கு வடக்கே கனகராயன்குளம் பகுதியில் கரிப்பட்ட முறிப்பில் நிலை கொண்டுள்ள படையினர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

காங்கேசனில்

## தடுத்துவைக்கப்பட்டுள்ள 14 பேர் பற்றிய விவரம்

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். மாவட்டத்தில் டிசம் பர் மாதம் முதல் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி வரை பல்வேறு சந்தர்ப்பங்களில் சந்தேகத்தின் பேரில் படை யினரால் கைது செய்யப் பட்டு காங்கேசன் துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 14 பேரின் பெயர் விவரங்களை பயங்கரவாத குற்றத் தடுப்பு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கைதான மூவர் பற்றி தகவல் இல்லை

வவுனியாவில் கடந்த மாதம் 5 ஆம் திகதி பொலி ஸாரால் கைது செய்யப்பட்ட 3 தமிழ் இளைஞர்கள் குறி த்து தகவல் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களைக் கண்டு பிடிக்க இவர்களின் பெற்றோர்முயற் சிகளை மேற்கொண்டுள்ள னர்.

சின்னத்துரை ரவில் குமார் (20 வயது), துரைராஜா மணிவண்ணன் (25 வயது), இன்பராசா தவநேசன் (23 வயது ஆகியோரே கைதான வர்கள் ஆவர்.

(இ-8)

## விமானப் படைக்கு பெண் விமானிகள்!

கொழும்பு, பெப். 13

இலங்கை விமானப்படை யில் முதன் முதலாக பெண் விமானிகள் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கிறார் கள்.

பெண் விமானிகளாகச் சேருவதற்கு 800 க்கு மேற் பட்டோர் விண்ணப்பங் களைச் சமர்ப்பித்திருந்த னர். அவர்களில் 33 பேரே முதன் முதலாகத் தெரிவு செய்யபபட்டு அவர்களுக்கு மூன்று மாத காலப் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

பின்னர் வடபகுதிக்கான விமானப் போக்குவரத்துச் சேவைகளில் இவர்கள் ஈடு படுத்தப்படுவார்கள்.

(இ-7)

# தமிழ்க் கட்சிகளை அச்செழுவுக்கு அழைத்து நேற்று சமரச மாநாடு

யாழ்ப்பாணம், பெப். 13

நேற்று முன்தினம் நகரில் இரு தமிழ்க் கட்சிக் குழு வினருக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பையடுத்து சமாதான மாநாடு ஒன்று 51 ஆவது படையணி தளபதி பிரிகேடியர் சாந்த கொட்டேகொட தலைமையில் நேற்று அச்செழுத் தளத்தில் நடைபெற்றது.

கைகலப்பில் ஈடுபட்ட இரு கட்சியினருக்கும் இடையில் இந்த மாநாட்டின் பின் சமாதான சூழ்நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் யாழ். நகரக் கமாண்டர் பிரிகேடி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் உறுப்பினர் எமது தோழரை கடத்த முயன்றனர்

### ஈ. பி. டி. பி- அமைப்பு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 13

புளொட் உறுப்பினர்கள் தமது தோழர் ஒருவரைக் கடத்த முயன்றதாகவும் இதனை அடுத்தே நெருக்கடி உருவானதாகவும் ஈ. பி. டி பி. அமைப்பு நேற்று விடுத்த

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. கைக்குண்டு, துப்பாக்கி எடுத்தபோது கைகலப்புமூண்டது

### மோதல் சம்பவம் குறித்து புளொட் அறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 13

ஈ பி டி. பி. உறுப்பினர் கள் கைக்குண்டுகள், கைத் துப்பாக்கி ஆகியவற்றை எடுத்த போது கைகலப்பு ஏற் பட்டது

புதன்கிழமை யாழ். நகரில் இடம்பெற்ற மோதல் சம்ப வம் தொடர்பாக புளொட் நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

புதன்கிழமை மாலை முத

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அ'புரத்தில் பிணையில் விடுபட்டோர் யாழ். நீதிமன்றத்தில் ஆஜராக வசதி

### நேற்று சட்டமா அதிபருடனான சந்திப்பில் இணக்கம்

கொழும்பு, பெப். 13

யாழ். குடாநாட்டில் பல் வேறு சந்தர்ப்பங்களில் கைதாகி அநுராதபுரம் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப் பட்டு பிணையில் விடுவிக்கப் பட்டவர்களுக்கான வழக்கு கள் உடனடியாக யாழ். மாவட்ட நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட உள்ளன.

சட்டமா அதிபர் அலுவல கத்தில் நேற்று நடந்த சந் திப்பு ஒன்றில் மேற்கண்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் சரத் சில்வா, சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த கமலத், பாதுகாப்பு அமைச்சு மேலதிக செயலாளர் ஜின தாச, வெரவத்துக்கும், மனித உரிமைகளுக்குமான அமைப்புச் செயலாளர் மகேஸ் வரி வேலாயுதம், ஈ.பி.டி.பி. அமைப்பு பேச்சாளர் ... ஆகியோர் இந்தச் சந்திப்பில் ...

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் அபிலாசைகளுக்கு கட்சிகள் மதிப்பளிக்க வேண்டும்

### ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு கருத்து

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். நகரில் இரு இயக் கங்களுக்கிடையில் ஏற்பட்ட துரதிர்ஷ்டவசமான மோத லையிட்டு ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆழ்ந்த வேதனை அடைகின் றது மக்களின் அபிலாசை களுக்கு மதிப்பளித்து சம்பந் தப்பட்டவர்கள் நடந்து

(10 ஆம் பக்கத் தொடர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா நவரெத்தினம்
(C. T. B. மணியம்)

உரும்பிராயைச் சேர்ந்த செல்லையா நவரத்தினம் (முன்னாள் இ. போ. ச. பரிசோதகர்) 12-2-98 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நல்லம்மாவின் கணவரும், நகுலமீரா, நகுலராதா, நகுலமாலா, சிறிசக்ராயுதா, நகுலகீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிதம்பரநாதன், சிவகுருநாதன், ரவீந்திரன், சிறியுகனேசு பாகுலிங்கம் ஆகியோரின் மாமனாரும், அழகரெத்தினம் (கட்டட ஒப்பந்தகாரர்), காலஞ்சென்ற பஞ்சரெத்தினம் மற்றும் செல்வரெத்தினம், கனகலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற இரத்தினதுரை மற்றும் சரோஜினி கைலாயபிள்ளை (கொழும்பு) ஆகியோரின் சகோதரனும், நாகபிரபா, சித்திராரூபி, சாமினி, துஷ்யந்தி, லாவர்ணன், நர்த்தனா, கீர்த்திக், மூசிகன் ஆகியோரின் அன்புப் பாட்டனாருமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 14-02-98 சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சிதம்பரநாதன் (மகள்)
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(சி-2875)

## சொர்ணம்மா இரத்தினசாமிக்குருக்கள்

இ. சொர்ணம்மா புதன்கிழமை கைதடியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசாமிக்குருக்களின் அன்பு மனைவியும், அமிர்தாம்பிகை அம்மா, மகேஸ்வரக் குருக்கள் ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற சிவராமலிங்கக்குருக்கள், பவானியம்மா ஆகியோரின் மாமியாரும், மனோகரராசக்குருக்கள், மாதவராசசர்மா, சகுந்தலா, நாகலெட்சுமி, நீரஜா, இரத்தினபவசர்மா, துஷ்யந்தி ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 12-2-98 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊர்தல் மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. மனோகரராசக்குருக்கள்
வீரகத்திப் பிள்ளையார் கோயில்,
கைதடி.

(63339)

## சி. சிற்றம்பலம் (தம்பு)
(சித்திரமேழி இளவாலை)

சித்திரமேழி, இளவாலையைச் சேர்ந்த சி. சிற்றம்பலம் (தம்பு) அவர்கள் காலமானார்.

இவர் திருமதி ச. செல்லக்கண்டு, திருமதி சு. செல்வநாயகி, திருமதி. ச. புஷ்பநாயகி, திரு. சி. மகேந்திரன், (பிரபல தனியார் கணித ஆசிரியர்), திரு. சி. விக்கினேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. செ. சண்முகநாதன் (இணுவில்), திரு. சோ. சுந்தரேஸ்வரன் (சண்டிலிப்பாய்), திரு. பொ. சண்முகநாதன் (மானிப்பாய்), திருமதி. ம. சத்தியபாமா (இணுவில்), திருமதி. வி. இரஞ்சினி [ஜேர்மனி), திரு. இ. இலங்கநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர் சுபாஜினி, சயந்தினி, சுதர்சன், ஆரணி, ஜீவன், கபிலன், கோகுலன், அனுஷன், திசோ ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று (98 – 02 – 13) வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. மகேந்திரன் (மகன்)

[53360]

## திருமதி சிவயோகம் திரவியம்

இல. 31, வெங்கடேசன் வீதி, பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகம் திரவியம் அவர்கள் 11-02-1998 புதன்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையா – கண்மணி தம்பதிகளின் புத்திரியும், க. திரவியம் அவர்களின் அன்பு மனைவியும், ரவீந்திரன் (பிரான்ஸ்) யோகேந்திரன் [இந்தியா], திருமதி சிவஞானம் வனிதா (பிரான்ஸ்), மனோகரன், சசிகலா ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவஞானம், திருமதி ரவீந்திரன் புஷ்பராணி ஆகியோரின் அன்பு மாமியும், திருமதி செ. கனகம்மா, திருமதி த. நேசம்மா, திருமதி ஆ. பூமணி, காலஞ்சென்றவர்களான க. பொன்னுத்துரை, க. விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற N.T. செல்லத்துரை (முன்னாள் மேயர்), தம்பிமுத்து, ஆறுமுகம், திருமதி வி. அன்னபூரணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், செல்வன் அபிஷேஷ், செல்வி கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12-02-98) நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
N.T.S. ஸ்ரீ தேவராஜலிங்கம் (பேறாமகன்)

31, வெங்கடேசன் வீதி,
பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

[53357]

## ஓவியக் கண்காட்சி

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையும், கலை வட்டமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள ஓவியர் இராசையாவின் ஓவியக் கண்காட்சி நாளை முதல் பல்கலைக்கழக முகாமைத்துவ விரிவுரை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

காலை 9.30 மணிக்கு கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரால் திறந்து வைக்கப்படும் இக் கண்காட்சி தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறும். காலை 10மணி முதல் மாலை 4 மணி வரை இக் கண்காட்சி நடைபெறும்.

நாளை மறுதினம் மாலை 3 மணிக்கு கலை வட்டத்தின் சிறப்புக் கருத்தரங்கு ஒன்றும் நடைபெற உள்ளது. (இ-9)

## சமய சந்நிதியில்

தொல்புரம் கொட்டடையம்பதி ஸ்ரீ ஆதி முத்துமாரியம்மன் கோவிலில் மாசி மாதப் பூரத் திருவிழா இன்று மாலை 6 மணிக்கு நடை பெறவுள்ளது. (ஐ-5)

★ ★ ★

சாவகச்சேரி கச்சாய் வீதி நாவாடிப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று விசேட பூஜையும், சித்தகம் குரு பரமசாமி குழுவினரின் பஜனைப் பாடல்களும், தென்மராட்சி திவ்விய ஜீவன் சங்கச் செயலாளர் வைரமுத்துவின் சமயச் சொற்பொழிவும் இடம் பெறும். (இ-117)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ். மாநகராட்சி மன்ற சுகாதாரப்பிரிவினால் நடத்தப்பட்ட தொண்டர்களுக்கான பயிற்சி நெறியில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்வழங்கும் வைபவம் நாளை காலை 8-30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

சுகாதார வெளிக்களபணியாளர்களுக்கு சைக்கிள்கள் வழங்கும் வைபவமும் நடைபெறும். (இ-3)


நெல்லியடி
மஹாத்மா
வெண் திரையில்

இன்று மட்டும்
ரஜனி - நக்மா, ரகுவரன்
நடித்த
பாட்ஷா

14-02-98 முதல்
15-02-98 வரை
விஜய் - சங்கீதா
நடித்த
பூவே உனக்காக
காட்சிகள் :- 10-30, 2-30
(ப. நே.) (இ/2765)



லிபேட்டி சினிமா
அச்சுவேலி.
30 அடி அகலத் திரையில்
வெள்ளி முதல்
ஞாயிறு வரை
பிரபு – சுபலக்சுமி
மணிவண்ணன்
நடித்த
பொன் மனம்
(புதிய வெளியீடு)
குடும்பச் சித்திரம்
திங்கள் முதல்
செவ்வாய் வரை
விஜயகாந் நடித்த
உளவுத்துறை
பழைய நேரம்
10-30, 2-30,
[illegible]


## திருவாசக முற்றோதல் நிகழ்வு

புன்னாலைக்கட்டுவன் வாசக முற்றோதல் நிகழ்வு ஆயாக்கடவை சித்தி விநாய இன்று காலை 8 மணிக்கு யார் தேவஸ்தானத்தில் திரு ஆரம்பமாகி நடைபெறும்.

## வாழ்த்துகின்றோம்

யா/ சுதுமலை
### சிந்மய பாரதி வித்தியாலயம்
மானிப்பாய்
### புலமைப் பரிசில் பரீட்சை - 1997

| சித்தியடைந்தமாணவர்கள் | | புள்ளிகள் |
| --- | --- | --- |
| 1. | செல்வன் ச. நந்தரூபன் | 186 |
| 2. | செல்வி இ. ஸ்ரீசயந்தினி | 129 |
| 3. | செல்வி ம. மயூரா | 123 |
| 4. | செல்வி ப. விபுலாஜினி | 121 |
| 5. | செல்வன் தி. அரவிந்தன் | 112 |
| 6. | செல்வன் செ. அமல்ராஜ் | 104 |
| 7. | செல்வி யோ. லொய்ட்ஸ் சொரூபா | 100 |
| 8. | செல்வன் க. பிரசாந் | 98 |
| 9. | செல்வி ச. ஜஜீவா | 94 |

சண்டிலிப்பாய்க் கோட்டத்தில் கூடிய தொகையாகச் சித்தியெய்திய ஒன்பது மாணவர்களையும், மேலும் 92 புள்ளிகளைப் பெற்ற இருமாணவர்களையும், இவர்களைக் கற்பித்த ஆசிரியர்களையும் ஊக்குவித்த அதிபரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(சி/2877)

## ஆளணி தேவை

ஒரு தொழில் நிறுவனத்துக்கு பின்வரும் ஆளணியினர் தேவைப்படுகின்றனர்.

1) தொழிநுட்பவியலாளர்:-
வானொலி, தொலைக்காட்சி பழுது பார்த்தல்.

2) உதவியாளர் - ஆண்:-
ஆங்கிலத்தில் எழுத, வாசிக்கக் கூடியவராகவும் இருப்பது விரும்பத்தக்கது..

விண்ணப்ப முடிவு திகதி:- 28 — 02 — 1998

தொடர்பு:-
**C/o உதயன் 694**

[53352]

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக் கழக
முன்னாள் விஞ்ஞான பீடாதிபதியும் இரசாயனதுறைத் தலைவருமான
### பேராசிரியர் சி. மகேஸ்வரன்
அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த துயரம் அடைவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

கவின் கலை மன்றம்,
இராமநாதன் நுண்கலைத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(53855)

# மரண அறிவித்தல்கள்

## இராமு குணரெட்ணம்

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் இராமநாதன் வீதி, கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமு குணரெட்ணம் 7-2-98 அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் 7-2-98 அன்று தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சீனியர் குணசேகரம் (மைத்துனர்)
54/6 ஆத்திசூடி வீதி,
யாழ்ப்பாணம்.

[53353]

## துரைபத்மநாதன் தவமணி

ஏழாலை வடக்கு, முனியப்பர் கோயிலடியை சேர்ந்த திருமதி துரைபத்மநாதன் தவமணி கொழும்பில் காலமானார்.

அன்னார் ஏழாலை வடக்கு கதிர்காமு துரைபதமநாதனின் அன்பு மனைவியும், த. எழில்வேந்தன் (யூனியன் கல்லூரி A/L மாணவன்), த. தமிழ்வாணி (யூனியன் கல்லூரி O/L மாணவி) ஆகியோரின் பாசமிகு பெரிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 9-2-98 திங்கட்கிழமை கொழும்பு பிபிலையில் நடைபெற்றன. என்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. துரைபத்மநாதன் [கணவன்]
இடைநோர் பாடசாலைக்கு அருகில்
ஏழாலை கிழக்கு

[இ/2789]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச ஆயுதக் கடத்தல் நடவடிக்கையை முறியடிக்க

# அந்தமானில் இந்தியப் படைகள் திடீர் இராணுவ நடவடிக்கை!

## 6 பேர் பலி! 74 பேர் கைது!! ஆயுதங்கள் மீட்பு!!!

போட்பிளேயர், பெப். 13

அந்தமான், நிக்கோபார் தீவுகளில் இந்தியப் படையினர் நேற்று முன்தினம் மிகப்பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

சர்வதேச ரீதியான ஆயுதக் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபட்டுவரும் சட்ட விரோத கும்பல்களுக்கு எதிராகவே இந்தத் திடீர் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது ஆயுதக் கடத்தல் காரர்கள் ஆறு பேர் கொல்லப்பட்டதாகவும், 74 பேர் கைது செய்யப்பட்டதாகவும், ஆயுதங்கள், வெடிப்பொருள்கள் நிரப்பப்பட்ட நான்கு இழுவைப் படகுகள், 40 ஆயிரம் சுற்று ரவைகள், 150 துப்பாக்கிகள் உட்பட பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் கிளர்ச்சி நடவடிக்கைகளுக்காக இந்த ஆயுதங்கள் கடத்தப்பட இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரகசிய புலனாய்வுத் தகவல் ஒன்றை அடுத்து இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் கரையோர காவல் படை என்பன கூட்டாக இணைந்து இந்தப்படை நடவடிக்கையை நடத்தின.

திரைப்படங்களில் வரும் திகில் காட்சிகள் போன்று ஆயுதக் கும்பலை படையினர் மடக்கிப் பிடித்ததாக இந்திய வானொலி தெரிவித்தது. (ஐ)

# மத்திய சென்னைக்கு 13 முனைப் போட்டி!

சென்னை, பெப். 13

தமிழகத்தில் மிக முக்கியமான நாடாளுமன்றத் தேர்தல் தொகுதிகளில் ஒன்றான மத்திய சென்னைத் தொகுதியில் தேர்தல் பிரசாரம் சூடு பிடித்துள்ளது.

ஐக்கிய முன்னணி அரசில் தொழில் அமைச்சரும், தி. மு. கவின் மூத்த தலைவருமான முரசொலிமாறன் மீண்டும் இத் தொகுதியில் போட்டியிடுகிறார். இவரை எதிர்த்து அ. தி. மு. க. வேட்பாளராக முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமாரும், காங்கிரஸ் வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. அன்பரசுவும் போட்டியிடுகின்றனர். இவர்களையும் சேர்த்து மத்திய சென்னைத் தொகுதிக்கு 13 முனைப் போட்டி நிலவுகிறது.

சுமார் 12 லட்சம் வாக்காளர்களைக் கொண்ட இத் தொகுதியில் சேப்பாக்கம், எழும்பூர், புரசைவாக்கம், பூங்காநகர் ஆகிய சட்டப் பேரவைத் தொகுதிகளை உள்ளடக்கியது.

பிரபலமானவர்கள் போட்டியிடுவதால் இத்தொகுதி அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. (ஐ)

# அஸாம் தீவிரவாதிகள் தாக்கு:

கௌகாத்திக்கு அருகே செல்பக்கரில் தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுவோர் நேற்று முன்தினம் இரவு நடத்திய தாக்குதலில் அஸாம் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் வீரேச் குமார் சர்மாவும் அவரது பாதுகாப்பு அதிகாரிகள் இருவரும் காயமுற்றனர்.

குஜ்ரால் வருவதற்கு சிறிது நேரம் முன்பாக

# சீக்கிய தீவிரவாதி ஜலந்தரில் கைது

ஜலந்தர், பெப். 13

பஞ்சாப்பின் ஜலந்தர் பகுதியில் சீக்கியத் தீவிரவாதி எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இவரிடம் இருந்து பெருமளவு வெடிப் பொருள்கள் மீட்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால் ஜலந்தருக்கு விஜயம் செய்வதற்கு சிறிது நேரத்தின் முன்னர் இவர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

சோனியா காந்தி கலந்து கொள்ளவுள்ள காங்கிரஸ் கட்சியின் பொதுக் கூட்டம் நடைபெறவிருக்கும் ஹார்தியானா என்னும் இடத்தில் காஷ்மீர் தீவிரவாதி எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

# ஊழல்கள் நிரூபிக்கப்பட்டால் ஜெயலலிதாவுடன் உறவு துண்டிப்பு!

## பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் வாஜ்பாய் அறிவிப்பு

ராஜஸ்தான், பெப். 13

ஊழல் குற்றச் சாட்டு சுமத்தப்பட்டோர் மீதான குற்றங்கள் உரிய நீதிமன்றங்களில் நிரூபிக்கப்பட்டால் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உட்பட குற்றம் சாட்டப்பட்ட கட்சித் தலைவர்களுடனான உறவை முறித்துக் கொள்வோம்.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அடல் பிஹாரி வாஜ்பாய் முன் கண்டவாறு அறிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலத்தில் கோடா என்னுமிடத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றில் வாஜ்பாய் இதனை அறிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

பா ஜ க. ஆட்சிப் பொறுப்பேற்றால் வெளிநாட்டு வங்கிகளில் இரகசிய கணக்கு வைத்துள்ள இந்தியர்களின் பெயர்களை பகிரங்கப்படுத்தும்.

தாராளமயம், உலகமயமாக்கல் உருவாகியுள்ள இந்த நேரத்தில் சொந்த நாட்டையே ஏமாற்றி வெளிநாடுகளிலிருந்து வரும் மோசடியான பணத்தைப் பெற சுவிஸ் நாடு விழையக்கூடாது. அதற்கேற்றவாறு வங்கிச் சட்டத்தை அந்த நாடு திருத்தவேண்டும்.

போஃபர்ஸ் பீரங்கி பேரத்தில் நடந்த ஊழலில் லஞ்சம் கைமாறியது குறித்த விவரங்கள் அடங்கிய சுவிஸ் வங்கி இரகசிய கணக்கு ஆவணங்களைப் பகிரங்கப்படுத்தும்படி வந்த கோரிக்கையை பிரதமர் குஜ்ரால் சமீபத்தில் நிராகரித்திருந்தார். அதனையடுத்து நிருபர்கள் கேட்ட கேள்விக்கு வாஜ்பாய் இவ்வாறு பதிலளித்தார். ஆவணங்கள் குறித்த விவரங்களை பகிரங்கப்படுத்துவதில்லை என்று இந்திய அரசு வாக்குறுதி கொடுத்துள்ளது. எனவே அந்த விவரங்களை அரசு வெளியிடாது என்று குஜ்ரால் தெரிவித்திருந்தார்.

வெளிப்படையான அரசு

நலிந்த ஒடுக்கப்பட்டோருக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் வெளிப்

( 8ஆம் பக்கம் பார்க்க)

# தி. மு. க. கூட்டணிக்கு வீரமணி ஆதரவு!

திருச்சி, பெப். 13

மக்களவைத் தேர்தலில் தி. மு. க — த. மா. கா கூட்டணியைத் திராவிடர் கழகம் ஆதரிக்கும் என்று அதன் பொதுச் செயலர் கி. வீரமணி தெரிவித்தார்.

திருச்சியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற திராவிடர் கழகத்தின் மத்திய நிர்வாகிக் குழுக் கூட்டத் தீர்மானங்களை விளக்கி செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது :–

எந்தக் கூட்டணிக்கு வாக்களித்தால் மத்தியில் பாரதிய ஜனதா ஆட்சிக்கு வராமல் தடுக்க முடியுமோ அந்தக் கூட்டணிக்கு வாக்களிப்பதே சிறந்தது. எனவே தி. மு. க — த. மா. கா கூட்டணிக்கு வாக்களிக்க முடிவு செய்துள்ளோம்.

இந்தத் தேர்தல் தமிழக ஆளுங்கட்சியின் செயற்பாடுகள் பற்றி அலசி ஆராய்ந்து தீர்ப்பளிக்க வேண்டிய ஒரு தேர்தல் அல்ல. திராவிட பார்முலாவுக்கு இது ஒரு பின்னடைவு எறலாலும் இது தற்காலிக நிலையே.

சிறுசிறு கட்சிகளுக்கு வாக்களித்துத் தங்கள் வாக்குகளைச் சிதற விடுவதால் எந்த உருப்படியான பலனுமிருக்காது. குழப்பமின்றி இருப்பதற்காகச் சட்டப் பேரவை இடைத் தேர்தல்களிலும் தி. மு. கவையே ஆதரிக்கின்றோம்.

பா. ஜ. க. — அ. தி. மு. க. இடையிலான புதிய கூட்டணியால் தமிழகத்தில் பாரதிய ஜனதா கால் வைக்க வழி ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆபத்து வரக் கூடாது — என்றார். (ஐ-10)

# மீண்டும் ஒரு பலவீனமான அரசை நாடு தாங்கிக் கொள்ளாது!

## சோனியா காந்தி கூறுகிறார்

திருவனந்தபுரம், பெப். 13

மறுபடியும் ஒரு பலவீனமான — ஸ்திரத்தன்மையற்ற அரசாங்கத்தை நாடு தாங்கிக் கொள்ளமாட்டாது —

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் திருமதி சோனியா காந்தி.

கர்நாடகத்தில் இரண்டாவது கட்ட சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சோனியா காந்தி செவ்வாய்க்கிழமை மாண்டியா நகரில் பொதுக்கூட்டத்தில் பேசினார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது;

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு இதயத்தையும் காங்கிரஸ் நேசிக்கிறது. நாட்டை ஆளும் சக்தியும், தகுதியும் காங்கிரஸுக்கு மட்டுமே உண்டு.

நாட்டுக்காக தியாகம் செய்தவர்களை மக்கள் எப்போதும் புறக்கணித்ததில்லை. சரியாக அங்கீகாரம் கொடுத்துள்ளனர். காங்கிரஸுக்கும், மக்களுக்கும் இடையிலான தொடர்பை சிலரால் புரிந்து கொள்ள முடியவில்லை. மக்களிடையே பிளவை உருவாக்க நினைப்பவர்கள் இவர்கள். நாட்டு மக்கள் குறித்தும் நாடு குறித்தும் இவர்களுக்கு அக்கறை இல்லை.

காங்கிரஸ் கட்சியில் உயிரைக் கொடுத்து உழைக்கும் தொண்டர்கள் ஏராளமானோர் உள்ளனர். மதவாத பிளவு சக்திகளை எதிர்த்து இவர்கள் இறுதிவரை போராட வேண்டும் — என்றார். (ஐ-10)

★ மலிவு விலையில் ★

அனைவரும் விரும்பிப் பயன்படுத்தும்

லீலா கலண்டர்கள், டயறிகள்

★ மொத்தமாகப் பெற்றுக் கொள்வோருக்கும் வியாபாரிகளுக்கும் விசேட கழிவுகள்

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் கலண்டர்களை கொழும்பு விலையிலும் 15 வீதக் கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு விலை 100 ரூபா

கிடைக்குமிடங்கள்:

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மொடேர்ண் ஸ்ரோர்ஸ்
பஸ் நிலையம்,
நெல்லியடி.

கரன் புக்சென்டர்
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

பாம்ஸ்
பஸ் நிலையம், சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை ஆணைக்குழுவின் தலையீட்டால் அறுவர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். நகரப் பகுதியில் வைத்து அண்மையில் படையினரால் கைது செய்யப்பட்ட இரு பெண்கள் உட்பட ஆறு பேர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முயற்சியினால் விடுவிக்கப்பட்டனர்.

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் தற்பொழுது கைதாவோர் காணாமற்போவோர் எண்ணிக்கை குறைந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமது யாழ். செயலகத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகளில் அதிகமானவை 1996. 97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பானவை ஆகும். இவ்வருடம் இது போன்ற முறைப்பாடுகள் கிடைப்பது குறைவாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

யாழ். நகரப் பகுதியில் கைது செய்யப்படுபவர்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்கள் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக உடனடியாகச் செயற்பட முடியாதுள்ளது. வாகன வசதியில்லாமையே இதற்கான காரணமாகும். இருந்தாலும் முடிந்த வரையில் செயற்பட்டு வருகிறோம் — என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ 5)


## வாழ்த்துகின்றோம்

இல்வாழ்வில் இணைந்துள்ள
எம் கழக தலைவன்
சு. சர்வேஸ்வரன் (ஈசன்)
அவர்களையும்
(A K S MOTORS - சாவகச்சேரி)
அவர்தம் இல்லாளையும் இணைபிரியா இல்லறம்காண
இதயம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீதாஸ் - பொழுது போக்கு
விளையாட்டுக் கழக அங்கத்தவர்கள்,
சாவகச்சேரி,

(சி2872)



## முன்னறிவித்தல்

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
வருடாந்தப் பொதுக்கூட்டம்
15. 03. 1998

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணிக்கு (இலங்கை நேரம்) கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப் பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் பிரேரணைகள் சமர்ப்பிக்க இருந்தால் அவற்றை அவர்கள் எழுத்து மூலமாக செயலாளருக்கு 28-02-1998 சனிக்கிழமை பிற்பகல் 4 00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு சங்க உறுப்பினர் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

ச. ஆனந்தராஜா
செயலாளர்

கொக்குவில் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில்,

(சி-2869)



## யாழ்ப்பாண மாநகரசபை

## அறிவித்தல்

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட வதிவிடங்கள் சிலவற்றில் வியாபார நோக்குடன் வியாபார ஸ்தலங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இவை யாவும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சட்டவிதிகளுக்கு முரணானவையாகும். ஆகவே உடனடியாக வதிவிடங்களை வியாபார நிலையங்கள், மற்றும் வர்த்தக நிலையங்களாக மாற்றியமைத்த குடியிருப்புக்காரர்கள் மாநகரசபையில் உள்ள திட்டமிடல் பிரிவில் தங்கள் விவரங்களைச் சமர்ப்பித்து அவற்றிற்கான அங்கீகாரங்களைப் பெறும்படி தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ் அறிவித்தல் திகதியிலிருந்து 15 நாள்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளாவிடின், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
1998-01-05.

(சி/2870)


## விசேட அ. அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ் சிறாம்பியடி (ஜே-79) கிராம சேவையாளர் பிரிவுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் 11 மணி வரை ஆரியகுளம் இராணுவ முகாமில் வைத்து வழங்கப்படவுள்ளன. உரியவர்கள் குடும்ப அட்டையுடன் வருகை தந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு அப்பகுதி கிராம சேவையாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## பருத்தித்துறையில் இரு கப்பல்கள்

வடமராட்சி, பெப். 13

தனியார்களுக்கென பல்வேறு அத்தியாவசியப் பொருட்களுடன் "ஹெந்தல", "ஓஷன்கரியர்" ஆகிய இரு கப்பல்களும் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

இவ்விரு கப்பல்களிலிருந்தும் பொருள்கள் இறக்கும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது (ஐ-173)

## இந்துசமய கருத்தரங்கு

வலிகாமம்தெற்கு, பெப் 13

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான இந்துசமயப்பாட கருத்தரங்கில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சித்தர்கள், ஆகமம் சாரா வழிபாடு ஆகிய தலைப்புகளில் சைவப் புலவர் க. சத்தியதாசன் கருத்துரை வழங்க உள்ளார். (ஐ-152)

## மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்கு மண்எண்ணெய்

வலிகாமம்தெற்கு, பெப், 13

மேட்டு நிலப்பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கவும், உதவி செய்வதற்குமாக மானிப்பாய் வடக்கு விவசாயிகள் சம்மேளனத்தைச் சேர்ந்த அங்கத்துவ விவசாயிகளுக்கு மண்எண்ணெய் பெற்றுக்கொள்ள சம்மேளனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி ஒரு பரப்புக்கு இரண்டு லீற்றர் என்ற அளவில் விவசாயிகளுக்கு தற்போது மண்எண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது. (ஐ-154)


## தேவை

யாழ். நகரில் உள்ள வர்த்தக ஸ்தாபனத்திற்கு
லிகிதர் (CLERK)
தேவை. (பெண்கள்) A/L சித்தியடைந்து ஆங்கில அறிவுள்ளவர்கள் 17-2-98 இற்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

C/o உதயன் 692

(53342)


# சுகாதாரத் திணைக்களத்துக்கு மருந்து வகைகள் வந்தன

திருநெல்வேலி, பெப். 13

யாழ். சுகாதாரத் திணைக்களத்திற்கு இவ் வருட முதலாம் காலாண்டிற்கான மருந்து வகைகள் கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் நேற்று எடுத்து வரப்பட்டுள்ளன. இந்த மருந்து வகைகளில் மலேரியாநோய்க்குபயன்படுத்தப்படும் குளோரோகுவின் எனப்படும் குளிகைகள் ஒரு இலட்சத்து 44 ஆயிரமும் பிறி மாக்குவின் எனப்படும் குளிகைகள் ஒரு இலட்சத்து 80 ஆயிரமும் வந்து சேர்ந்துள்ளதாக சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை மலேரியா நோய் அதிகமாகக் காணப்படும் பிரதேசமான தென்மராட்சி பிரதேசத்திலுள்ள பளை அரசினர் வைத்தியசாலைக்கும், இப்பிரதேசத்திலுள்ள ஏனைய அரசினர் வைத்தியசாலைகளுக்கும் தேவையான குளிகைகள் உடனடியாக நேரில் வாகனம் மூலம் கொண்டு சென்று விநியோகிப்பதற்குமாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ஐ-135)

# பாவனைக்கு உதவா நெல்லிரசம் ஊர்காவற்றுறையில் மீட்பு!

ஊர்காவற்றுறைப் பகுதியில் சரியான முறையில் லேபிலிடப்படாத நெல்லிரசப் போத்தல்கள் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்ததை சுகாதாரப் பரிசோதகர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

உடனடியாக அவை கைப்பற்றப்பட்டது. நெல்லிரசம் உற்பத்தி செய்த நிறுவனத்தின் பெயர், காலாவதியாகும் திகதி என்பன போன்ற விவரங்கள் எதுவும் போத்தல் லேபலில் இடம்பெறவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரில் கைப்பற்றப்பட்ட இந்த நெல்லிரசப் போத்தல்களை பரிசோதித்த போது அவற்றில் செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட நெல்லிரச எசன்ஸ் கலக்கப்பட்டிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. ஊர்காவற்றுறை சுகாதார பரிசோதகர் கே. வருணநாதன் கடைகளில் திடீர்ப்பரிசோதனை மேற் கொண்ட போதே இந்த நெல்லிரசப் போத்தல்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இது தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டது. (ஐ 135)

## சிரமதானம்

ஈச்சமோட்டை கலட்டி புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலய சுற்றாடல் பகுதியை ஆலய நிர்வாகசபை உறுப்பினர்களும் பொதுமக்களும் இணைந்து சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளனர்.

இச் சிரமதான வைபவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ஐ-17)

# கழற்றி வைத்திருந்த சைக்கிள் திருடப்பட்டது!

உரும்பிராய், பெப். 13

வீடு ஒன்றினுள் இரவு நேரத்தில் புகுந்த திருடர்கள் திருத்துதற்காக வைக்கப்பட்டிருந்த ஒரு சைக்கிளைத் திருடிச் சென்றுள்ளனர். இது உதிரிப்பாகங்களாகக் கழற்றி வைக்கப்பட்டிருந்ததால் எடுத்துச் செல்வது அவர்களுக்கு சுலபமாக இருந்துள்ளது.

நீர்வேலி வடக்கில் கடந்த திங்கள் இரவு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது ஒதுக்குப்புறமான இடத்தில் இச் சைக்கிள் பாகங்கள் வைக்கப்பட்டிருந்ததனால், அரவமின்றிச் செயற்படத் திருடர்களுக்கு வசதியாகப் போய்விட்டது. திருட்டு இடம் பெற்ற நேரத்தில் வீட்டுக்காரர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். காலையில் எழுந்து பார்த்த போதுதான் திருட்டு நடைபெற்றது தெரிய வந்தது. அத்துடன் இத்திருடர்கள் 5 கோழிகளையும் திருடிச் சென்றுள்ளனர். (ஐ-154)

# கூட்டுறவுச் சபை நடத்தும் மனையியல் பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையினால் நீர்வேலி வடமராட்சி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம். சுன்னாகம். சங்கானை போன்ற பகுதிகளில் மனையியல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

800 பயிற்சியாளர்கள் இந்த வகுப்புக்களில் கலந்து கொண்டு வருகின்றனர். இந்த பயிற்சி நிலையங்களில் தேர்ச்சியடையும் பயிற்சியாளர்களுக்கு யாழ். கல்வித் திணைக்களத்துடன் இணைந்து டிப்புளோமா பயிற்சி அளிக்கப்படும் என கூட்டுறவுச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-5)

# சேதமடைந்த வீடுகளை திருத்துவதற்குக் கடன்

மல்லாகம், பெப் 13

கடந்த கால இராணுவ நடவடிக்கையின் போது சேதம் அடைந்த வீடுகளை திருத்துவதற்கு தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் 25 ஆயிரம் ரூபா கடன் வழங்கப்படவுள்ளது.

2 ஆயிரத்து 500 முதல் 5 ஆயிரம் ரூபாவுக்கு இடைப்பட்ட வருமானம் உடையவர்களுக்கு மட்டுமே இக் கடன் வழங்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக பிரதேச செயலக பிரிவுகளில் தலா பத்துப்பேருக்கு இக் கடன் வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இத் திட்டத்தின் கீழ் சுமார் 150 பேருக்கு இக்கடன் குறைந்த வட்டியில் வழங்கப்படவுள்ளது. (ஐ-86)


## ENGLISH SINHALA CLASSES

BASIC ENGLISH
ஆரம்பம்: 04-02-98 சனி காலை 7-30
சிங்களம் -எழுத்து/ பேச்சுப்பயிற்சி முதல் O/L வரை
ஆரம்பம்: 14-02-98 சனி பிற்பகல் 5-00
T. SAGATHEVAN B. A. Lond.
46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(53346)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரசிங்கம் மண்டபத்தை புனரமைப்பதற்கு முடிவு

## அதற்கு முன்னோடியாக மிதிவெடிகள் அகற்றப்படும்

யாழ்ப்பாணம், பெப். 13

யுத்தத்தினால் சேதமடைந்திருக்கும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தை புனரமைப்புச் செய்வதற்கு தேசிய கூட்டுறவுச்சபை தீர்மானித்துள்ளது.

தேசிய கூட்டுறவுச் சபையின் மத்திய நிர்வாக சபைக் கூட்டம் அண்மையில் காலியில் அதன் தலைவர் லயனல் சமரசிங்க தலைமையில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் வெ. கனகசபாபதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் புனரமைப்பு தொடர்பாக பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார்.

இந்தப் பிரேரணையை ஆராய்ந்த தேசிய கூட்டுறவுச் சபையின் மத்திய நிர்வாக சபையினர் புனர்வாழ்வு அமைச்சுடன் தொடர்பு கொண்டு இம் மண்டபத்தை புனரமைப்புச் செய்வதெனத் தீர்மானித்தனர்.

இம்மண்டபம் புனரமைப்பு செய்யப்படுவதற்கு முன்னோடியாக இம்மண்டபம் அமைந்துள்ள பகுதிகளில் மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகள் இருந்தால் அவற்றை அகற்ற உதவுமாறு யாழ். கூட்டுறவுச் சபை யாழ். நகர கொமாண்டர் சுஸந்த மெண்டிஸுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

(இ-5)

## அனுமதி வழங்கப்பட்டும்

# மடு அகதிமுகாமுக்கு மருந்து எடுத்துச் செல்லப்படவில்லை

## பாதுகாப்பு அமைச்சு விளக்கம் கேட்கிறது

மடுவில் அமைந்துள்ள திறந்தவெளி அகதி முகாமுக்கு மருந்துப் பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கியும், அவை அங்கு போய்ச் சேராமை குறித்து பாதுகாப்பு அமைச்சு சுகாதார அமைச்சுச் செயலரை விளக்கம் கோரியுள்ளதாக தெரியவந்தது.

மடு முகாமில் பணி புரியும் எம். எஸ். எவ். என்னும் பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி மடு முகாமுக்கு மருந்துப் பொருளகளை எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பித்திருந்தனர்.

இதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சு 30-12-97 இல் வழங்கி அந்த அனுமதிக்கான கடிதத்தை சுகாதார அமைச்சுக்கு அனுப்பியிருந்தது.

அனுமதி தொடர்பான அறிவித்தல் கிடைக்காததைத் தொடர்ந்து எம். எஸ். எவ். அமைப்பு கடந்த மாதம் 29 ஆம்திகதி பாதுகாப்பு அமைச்சுக்கு நினைவூட்டல் கடிதம் ஒன்றை அனுப்பியது.

மருந்து எடுத்துச் செல்ல ஒரு மாத காலம் செல்லுபடியாகும் வகையான அனுமதிக் கடிதத்தை சுகாதார அமைச்சுக்கு அனுப்பி விட்டதாக பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த கேணல் எம். எல். ஜெயரத்தின தெரிவித்துள்ளார்.

இந்த அனுமதிக் கடிதம் குறிப்பிட்ட அமைப்பை ஏன் சென்றடையவில்லை என்பதற்கு விளக்கம் கோரியுள்ள பாதுகாப்பு அமைச்சு இனி இது போன்ற சம்பவங்கள் இடம்பெற இடமளிக்கக் கூடாது என்றும் சுகாதார அமைச்சைக் கேட்டுள்ளது.

(இ-164-3)

## கலந்துரையாடல்

வலிகாமம்தெற்கு, பெப். 13

கண்டியில் நடைபெற உள்ள ஐந்தாவது தேசிய சாரணர் ஜம்போறியில் கலந்து கொள்வது பற்றிய கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்: காங்கேசன்துறை மாவட்ட சாரணர் இளைச்சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கலந்துரையாடலில் பாடசாலை சாரணர், குருளைச் சாரணர்களைத் தவறாது கலந்து கொள்ளும்படி மாவட்டசாரணர் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(ஐ-152)

# மானிப்பாய் பகுதிக்கு மின் விநியோகம்

## வைபவ ரீதியாக ஆரம்பம்

மானிப்பாய் பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன. இதற்குப் பயன்படுத்தப்படுவதற்கான 250 கே. வி. வலுவுள்ள மின்பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) நேற்று முன்தினம் காலை வைபவரீதியாக மின்சார சபையின் உதவிப் பொது முகாமையாளர் வி. இராஜேந்திரத்தால் இயக்கி வைக்கப்பட்டது.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரம் வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக மின்சார சபையின் சுன்னாகம் அலுவலகத்தைச் சேர்ந்த மின் அத்தியட்சகர் தெரிவித்தார். விண்ணப்பங்கள் கிடைத்த ஒழுங்கின்படி முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்புகள் வழங்கப்படவுள்ளன.

(ஐ-154)

# விவசாயிகள் ம.எண்ணெய் திடீரென நிறுத்தப்பட்டது!

மானிப்பாய் எரிபொருள் நிலையத்தில் விவசாயிகளுக்கான மண்எண்ணெய் விநியோகம் அறிவித்தல் ஏதுவுமின்றித் திடீரென நிறுத்தப்பட்டது.

உடுவில் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தரின் அனுமதியுடன் விவசாய சம்மேளனங்களின் பட்டியல்களுக்கு வழங்கப்பட்டு வந்த மண்எண்ணெய் விநியோகமே நிறுத்தப்பட்டுள்ளதால் வெளிச்சந்தையில் கூடுதல் விலைக்கு எண்ணெய் கொள்வனவு செய்து நீரிறைக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ். பெற்றோலியக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் விவசாயிகள் சம்மேளனத்தின் பெயர்ப்பட்டியல்களை மேற்படி எரிபொருள் விற்பனை நிலையத்திலிருந்து எடுத்துச் சென்றதையடுத்தே விவசாயிகளுக்கான மண்எண்ணெய் விநியோகம் நிறுத்தப்பட்டதாக சொல்லப்படுகிறது.

(ஐ-90-5)

## செயலமர்வு ஒத்திவைப்பு

இம்மாதம் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த தொலைக்கல்வி செயலமர்வு எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுமென தொடர்கல்வி பாடநெறி ஆசிரியர்களுக்கு கரவெட்டி மத்திய நிலைய சிரேஷ்ட போதனாசிரியர் அறிவித்துள்ளார்.

[ஐ-173]

## கருத்தரங்கு

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். செங்குந்த இந்துக்கல்லூரியில் உளவியல் கருத்தரங்கு கல்லூரி அதிபர் எஸ். இராஜகோபால் தலைமையில் காலை 8 30 மணி தொடக்கம் பி.ப 5 30 மணி வரை நடைபெறும். இக்கருத்தரங்கில் வண. பிதா டேமியன் கருத்துரை வழங்குவார். இளம் தலைமுறை குறித்த உளவியல் கருத்துரைகள் முக்கியமாக இடம்பெறும்.

(ஐ-103)

## யாழ். போதனா வைத்தியசாலை

# முதல் காலாண்டுக்கான மருந்து குறைந்த அளவிலேயே வந்தது

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். போதனா வைத்தியசாலையின் இந்த வருடபாவனைக்கான, முதல் காலாண்டுக்கான மருந்து வகைகளில் சிறு தொகுதி நேற்று முன்தினம் வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கப்பல் மூலம் எடுத்துக் வரப்பட்டுள்ளது.

வைத்தியசாலையினால் அவசரமாகக் கோரப்பட்ட மருந்து வகைகளும் மிகக் குறைந்த அளவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவசர தேவை என கோரப்பட்ட மருந்து வகைகளிலும் கேட்கப்பட்ட தொகையிலும் ஐந்தில் ஒரு பங்கே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவற்றிலும் சில ''அன்ரிபயற்றிக்ஸ்''களும் ஏற்புத்தடை ஊசி மருந்து, கிறேப் பண்டேஜ் போன்றவையே அடங்கியுள்ளன. ஏற்புத்தடை ஊசியும் தனித்தனி 'வயல்'கள் இல்லாமல் 20 பேருக்கு ஒரு ''வயல்ஸ்'' என்ற ரீதியிலேயே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவை யாழ். போதனா வைத்தியசாலையின் தேவையைப் பொறுத்தவரை ஒரு வாரத்துக்குக் கூட போதாத நிலையில் உள்ளதாக வைத்தியசாலை வட்டாரத்தில் கவலை தெரிவிக்கப்பட்டது.

மேலும் எக்ஸ்றே பிரிவுக்கு தேவையான எக்ஸ்றே பிலிம் வகைகள் இரசாயனக் கலவைகள் என்பன போன்றவையும், ஒக்ஸிஸன் சிலிண்டர் சொற்ப தொகையும் எடுத்து வரப்பட்டுள்ளன.

(இ-139-5-15)

## மாநாட்டு முடிவின் பிரகாரம்

# பெண்கள் சத்திரசிகிச்சை வார்ட் திருத்த வேலை நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். போதனா வைத்தியசாலையில் சேதமடைந்து செயலிழந்த நிலையிலிருந்து வந்த 16 ஆம் இலக்க பெண்கள் சத்திர சிகிச்சை வார்ட்டை திருத்தியமைக்கும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்துகடந்த திங்கட்கிழமை, சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி கே. பெர்னாண்டோ, யாழ். நகர கொமாண்டர் பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் மற்றும் யாழ். செயலக அதிகாரிகள், யாழ். ஆஸ்பத்திரி உயர் மட்டக்குழுவினர் சகிதம் நடைபெற்ற உயர் மட்ட மாநாட்டில் எடுத்த தீர்மானங்களில் இந்த வார்ட்டை திருத்தியமைப்பது பற்றிய விடயமும் ஒன்றாகும்.

இத் தீர்மானத்துக்கமைய இந்த 16 ஆம் வார்ட்டை புனர்நிர்மாணம் செய்யும் பொறுப்பு கட்டடத் திணைக்கள யாழ். பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு உடனடியாகவே, கட்டடத் திணைக்களத்தினரால் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(இ-15)

# வாசகனைச் சிந்திக்கத் தூண்டும் ஆக்கங்களே சிறந்த படைப்புகள்

## சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் உரை

திருநெல்வேலி, பெப். 18

எழுத்தாளரின் படைப்புகள் வெறும் பொழுது போக்கிற்காக வாசிப்பதற்கு மட்டும் என்று இல்லாமல் படிக்கும் போது வாசகனை நிதானித்து சிந்திக்க வைக்கத்தக்க வகையில் அமைவனவே சிறந்த படைப்புகளாகும்.

சமகால நிகழ்வுகளை படம் பிடித்துக் காட்டுவதாக அமையும் திருமதி யோகேஸ்வரியின் கதைகள் தனிமனித உணர்வுகளுக்கும், சமூக உணர்வுகளுக்கும் இடையே ஏற்படும் மோதல்களை உணர்த்தும் படைப்புகளாகக் கணிக்கப்படுகின்றன.

யாழ். இலக்கிய வட்டத்தின் ஆதரவில் நடைபெற்ற கன்னாதிட்டி மக்கள் வங்கி முகாமையாளரும், எழுத்தாளருமான திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் ''உணர்வின் நிழல்கள்'' என்ற சிறுகதைத் தொகுதி நூலின் அறிமுக விழாவில் கலந்து கொண்டு நூல் ஆய்வுரை நிகழ்த்துகையில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ந. சுப்பிரமணியன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். இலக்கிய வட்ட தலைவர் கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று முற்பகல் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் இந்நூல் வெளியீடு நடைபெற்றது. இலக்கிய வட்ட செயலாளர் புத்தொளி வரவேற்புரை நிகழ்த்தினார். [illegible] தமது உரையில் மேலும் கூறியதாவது:-

எம்மைப் பாதித்து வரும் பிரச்சினைகளில் இனப்பிரச்சினையை தவிர்த்து சமுதாயப்பிரச்சினைகளைப் பார்ப்போமானால் பெண்களுக்கு உரித்தான பல கஷ்டங்களை அவதானிக்க முடிகின்றது. பெண்ணை திருமணம் செய்யாது காசை திருமணம் செய்யும் ஆணாதிக்க நிலையும், இதனால் பெண்கள் அடையும் வேதனைகள், எதிர்நோக்கும் பாதிப்புகள், பிரச்சினைகள் போன்றவற்றையும் நூலாசிரியர் தமது கதைகளில் தத்ரூபமான - தனித்துவமான முறையில் உணர்வு பூர்வமாக எடுத்துக் காட்டியுள்ளார் — என்றார்.

யாழ். பல்கலைக்கழக பதிவாளரும், எழுத்தாளருமான கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்) உரையாற்றுகையில் —

சமுதாயம் என்ற பரந்த தளத்தில் நின்று மானுடத்தை பல கோணங்களில் நோக்கி புனையப்பட்ட இக் கதைகள் படைப்பாளியின் பார்வையின் விரிவை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இலக்கியப் படைப்புகள் வெறும் கனவுலகில் வாசகனை சஞ்சரிக்க விடாது அவனை நல்வழிப் படுத்துபவையாகவும், மிளிர வேண்டும். திருமதி யோகேஸ்வரியின் படைப்புகள் தரமான எழுத்தாளருக்குரிய படைப்புகளாக - சரளமான, எளிமையான சித்திரிப்புகளுடன் விளங்குகின்றன. நேரடி அனுபவங்களை அடிப்படையாக வைத்து புனையப்பட்டவையாக இருப்பினும் தமது அனுபவங்களை வெளியிடுவதற்கு சிறுகதை என்னும் இலக்கிய வடிவத்தை அவர் கையாண்டிருக்கும் திறமையை நம்மால் அவதானிக்க முடிகின்றது — என்றார்.

திருமதி கோகிலா மகேந்திரன் அறிமுக உரை நிகழ்த்துகையில் —

பெண் என்பவள் திருமணம் ஆகாது செல்வியாக இருக்கும் போதும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. திருமணமாகி திருமதியாக இருக்கும் போதும் பல்வேறு கஷ்டங்களை பெண் என்ற வகையில் அவள் எதிர்நோக்க வேண்டியவளாக இருக்கிறாள். ஆணாதிக்கத்தின் பாதிப்பு பெண்களுக்கு இன்றும் வாழ்வில் தொடர்ந்து கொண்டிருப்பதை நேரடியாகப் பல இடங்களிலும் காணக் கூடியதாக இருக்கின்றது — என்றார்.

பிரபல வானொலி நாடக எழுத்தாளர் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை உரையாற்றுகையில் —

இன்றைய சூழ் நிலையில் ஓர் எழுத்தாளர் தமது படைப்புகளை நூலுருவில் கொண்டு வந்து வெளியிடுவது என்பது மிகவும் கஷ்டமான காரியம் கடந்த யுத்த கால அனர்த்தங்களின் போதும் இடப்பெயர்வுகளின் போதும் எழுத்தாளர்கள் பலருடைய குறிப்புகள், கையெழுத்துப் பிரதிகள் அழிந்து காணாமற் போய் விட்டன — என்றார்.

நூலாசிரியர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் இறுதியில் பதிலுரை வழங்கினார்.

(ஐ-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட பொமனேரியன் கறுப்பு ஆண், பெண் நாய்க் குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: "மல்லிகாபதி" சந்தைமுன் ஒழுங்கை, மானிப்பாய்.
(53322)

பிறிமா புரோறயிலர் குஞ்சுகள், பிறிமா பிறவுன் வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. "மல்லிகாபதி" சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய்.
[53323]

தற்பொழுது பாவனையிலிருக்கும் போட்டோ பிரதி இயந்திரம் SHARP SF7800, 7500 WATTS ஜெனரேட்டர் ATSLAS அடையாளஅட்டை சுவரிடும் இயந்திரம், 120 WATTS பெரியபற்றரி. ஒரு மின்சார ரைப்றைட்டர் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; இல. 185, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
[53324]

### SPOKEN ENGLISH

வேலை பார்ப்பவர்க்கும், ஆசிரியர்க்குமான விசேட ஆங்கில வகுப்பு (கலபமாக கதைக்கவும் மாணவர்க்கு சுலபமாக கற்பிப்பதற்குமான வகுப்புகள் 4 P.M, 6 P.M) ஆசிரியர் ந. விக்கி னவீஸரன் ஆச்சாரி, 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
[53311]

### தவறிவிட்டது

கார்த்திகேசு ஜீவதாசன். 61, புதிய கடற்கரைறோட், குருநகர், யாழ்ப்பாணம் என்னும் பெயர் முகவரியை உடைய விசேட அடையாள அட்டை (0901025936) நாவற்குழிக்கும், கச்சேரிக்கும் இடையில் 11-2-98 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 22, புதிய வீடமைப்புத்திட்டம், குருநகர் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்
[53334]

### இலகு திருமணசேவை

பிறப்பு 1969 புனர்பூசம், கணக்காளர், அரச உத்தியோகம் பார்க்கும் பெண்ணுக்கு மணமகன் தேவை. உள்ளூர் மணமக்களுக்கும், கனடா மணமக்களுக்கும் அதிவிரைவில் உதவமுடியும். தொடர்பு: ஞாயிறு. துரை விமலா, 958/8, கே.கே.எஸ். வீதி, யாழ். நாச்சிமார் கோயில்.
[53337]

### திருத்த வேண்டுமா?

சகல ரி. வி. நிகழ்ச்சிகளையும் தெளிவாகப்பார்ப்பதற்கு அன்ரனா பொருத்திக் கொள்ளவும், ரி. வி. றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும், வீனஸ் தனபாலசிங்கம், Diploma I Electronic Engineering London, 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக) யாழ்ப்பாணம்.
[சி/2843]

## சேர். பொன். இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம்

சிவாச்சார்ய குருகுலம்
யாழ். பல்கலைக்கழக
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம்
திருநெல்வேலி

### 1998 ஆம் ஆண்டுக்குரிய புதிய மாணவர்களுக்கான அனுமதி

மேற்படி குருகுலத்தில் புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சேரவிரும்பும் மாணவர்கள் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து தமது பெற்றோருடன் 15-02 1998 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்திற்கு சமுகமளிக்கவும்.

மாணவர் அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக்கழக ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்திலும், நல்லூர் சிவன் கோயிலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

குருகுல இணைப்பாளர்.

(53335)

## அறிவித்தல்

பருத்தித்துறை தம்பசெட்டியில் இயங்கிய
போரூட் நூலகம்
25-01-98 முதல் அல்வாய் கிழக்கு
பாரதிதாசன் சனசமூக நிலையக்
கட்டடத்தில்

### பாரதிதாசன் நூலகம்

என்னும் பெயரில் இயங்குகின்றதென்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

முக்கிய குறிப்பு:
தம்பசெட்டி போரூட் நூலகத்தின் உறுப்பினர்கள் தமது உறுப்புரிமையை பாரதிதாசன் நூலகத்தில் தொடர ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நூலக நிர்வாகக் குழு

பாரதிதாசன் நூலகம்,
அல்வாய்.
(சி/2865)

உ

## சிவாச்சார்யாபிஷேக அழைப்பு

( குருப்பட்டம் தரித்தல் )

அன்புடையீர்,

பகவத் கிருபையை முன்னிட்டு ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் ஈசுரவருடம் மாசி மாதம் 4 ஆம் திகதி [16 - 02 - 98] திங்கட்கிழமை காலை 9. 06 மணிக்குமேல் 9. 51 மணிக்குள் வரும் சித்திரை நட்சத்திரமும் மீனலக்னமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

எனது குமாரன்
சிரஞ்சீவி கேதீஸ்வரசர்மாவிற்கு ( கண்ணன் )

சமயதீட்சா, விசேடதீட்சா, நிர்வாணதீட்சா, ஆசார்யாபிஷேகம் செய்து வைக்க திருவருள் துணை கொண்டு நிச்சயித்துள்ளமையால் மேற்படி முகூர்த்தத்திற்குத் தாங்கள் இஷ்டமித்திர குடும்ப சமேதராக வந்து ஆசார்யாபிஷேகத்தை நடத்திவைத்து குமாரனை ஆசீர்வதிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

முகூர்த்தம்:
உடுப்பிட்டி வீரபத்திரர் கோவில் மண்டபத்தில் நடைபெறும்.

தீட்சாகுரு: "வேதாகம ஞானபாஸ்கரன்"
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் (சமாதான நீதிவான்)
காயத்ரிபீடம், இணுவில்.

வரவேற்பாளர்கள்:
சிவஸ்ரீ சாம்பவசிவ சோமசபேசக் குருக்கள் தம்பதிகள்
(பிரதமகுரு, சிவகாமி அம்மன் கோயில், இணுவில்.)
சிவஸ்ரீ இ. கேதீஸ்வரக்குருக்கள் தம்பதிகள்
(பிரதமகுரு, கந்தசுவாமி கோயில், உசன்.)
பிரம்மஸ்ரீ இ. கலாராச சர்மா தம்பதிகள் (உடுப்பிட்டி)

சுபம்.

சிவஸ்ரீ சாமி. கனகசபாபதிக் குருக்களும்
பாரியாரும்.

வீரபத்திரர் கோயில், உடுப்பிட்டி.
குறிப்பு: இவ்வழைப்பிதழைத் தனிப்பட்ட அழைப்பிதழாக ஏற்றுக் கொள்ளவும்.
[53319]

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 21 | 5 |
| 03 | 01 |
| 1911 | 1998 |

அமரர்
### குமாரசுவாமி செட்டியார் கதிர்காமத்தம்பி

(ஓய்வு பெற்ற அரச இலிகிதர்)

எங்கள் பாசமிகு குடும்பத் தலைவர் அமரர் குமாரசுவாமி செட்டியார் கதிர்காமத்தம்பி அவர்கள் 15 - 01 - 98 இல் சிவபத மெய்தியமையை அறிந்தும், கேட்டும், எமது இல்லம் நாடிவந்து இறுதிக்கிரியைகளில் கலந்தும், உதவி ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும், தபால் தந்திமூலமாக அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும, யாழ். மாவட்ட வடமராட்சிக் கிளை, பேக்கரி உரிமையாளர் சங்க அங்கத்தவர்கள், வடமராட்சி லயன்ஸ் கழகத்தினர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் 14. 2 98 சனிக்கிழமை காலை 7 மணிக்கு சுப்பர் மடத்திலுள்ள அந்தியேட்டி மண்டபத்தில் அந்தியேட்டிக்கிரியைகள் முடிவுற்றதும், அன்னாரது இல்லத்தில் நிகழும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் தாங்கள் கலந்து கொண்டு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து, ஆசீர்வதித்து சிறப்பித்தருமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவோடும், அன்போடும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மனைவி: பூலச்சுமி
மக்கள்: குமாரசுவாமி
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)
பாலச்சந்திரன் (மைலன் பேக்கரி)
திருமதி இ. கமலாசனி
செல்வி நாகபூசணி
திருமதி தி. தையல்நாயகி

235/1, வி. எம். றோட்,
பருத்தித்துறை.
(சி/2864)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் இராசையா செல்வராசா

(இளைப்பாறிய ஆசிரியர்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 18 - 06 - 1920 | 19 - 02 - 1992 |

திதி: 13 - 02 - 1998

பாசமிகு அப்பாவே!
பரிவின் உறைவிடமே!
ஆண்டுகள் ஆறு அகன்றாலும்
அழியாதே உம் நினைவு
எம் நெஞ்சில் என்றும்.

அன்பு மனைவி, மகள் செல்வி,
பேரப்பிள்ளைகள்.

"சுபசதனம்",
சம்பியன் லேன்,
கொக்குவில்.
(53312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திக் கொத்து

## சிமெந்து விநியோகம்

உரும்பிராய், பெப். 13
அண்மையில் கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட சிமெந்து நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் விண்ணப்பதாரிகளின் அத்தியாவசியத் தேவையைக் கருத்திற் கொண்டு பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்படவுள்ளது. இந்த வகையில் ஒவ்வொரு கிளைக்கும் 10 பக்கட் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிளைக்குழுவின் தலைவர் அல்லது செயலாளரினால் சிபார்சு செய்யப்பட்டு விண்ணப்பங்கள் நாளைக்கு முன்பு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஐ-154)

## 125 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், பெப். 13
ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தியாலய 125 ஆவது ஆண்டு நிறைவுவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் டி. ஆர். அருமைநாயகம், அருட்சகோதரி சோபியா பஸ்தியாம்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

(ஐ-5)

## கூ. சங்கங்களுக்கு சைக்கிள்கள்

அரியாலை பெப். 13
யாழ் மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவு நுகர்வோர் சமாசத்திற்கு கப்பலில் எடுத்துவரப்பட்ட ஐம்பது சைக்கிள்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பகிர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு சங்கத்திற்கும் இரண்டு சைக்கிள்கள் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டுவருவதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-17)

## விவசாயிகளுக்கு அறிவித்தல் பலகை

யாழ்ப்பாணம், பெப்.13
நவாலி விவசாயிகள் சம்மேளனம் தனது விவசாயிகளுக்குரிய அறிவுறுத்தல்களை உடனுக்குடன் வழங்குவதற்காக அறிவித்தல் பலகை ஒன்றை நவாலி மத்திய சந்தைப் பகுதியில் வைத்துள்ளது.

(ஐ)

## விவசாயிகள் பதிவு சான்றிதழ்

யாழ்ப்பாணம், பெப்.13
நவாலி விவசாயிகள் சம்மேளனத்துக்கு பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. கமத்தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் இதனை வழங்கியுள்ளார்.

(ஐ)

## உபாலதிபர் நியமனம்

நெடுந்தீவு கிழக்கு உபதபாலகத்திற்கு புதிய உபதபாலதிபர் ஒருவர் கடந்த 6 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் உபதபாலதிபராகக் கடமையாற்றிய திருமதி வள்ளியம்மை தில்லையம்பலம் கடந்த 6 ஆம் திகதி முதல் ஓய்வு பெற்றதால் இவரது இடத்திற்கு விசுவலிங்கம் அமிர்தலிங்கம் உபதபாலதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

[ஐ-7]

## தேங்காய் விலை உயர்வு

வடமராட்சி, பெப். 13
யாழ். குடாநாட்டில் தேங்காயின் விலை வெகுவாக அதிகரித்துள்ளது. இதுவரை காலமும் எட்டு ரூபாவுக்குள் விற்கப்பட்டு வந்த தேங்காய் தற்போது 12 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

(ஐ-173)

## மூக்குகண்ணாடி அன்பளிப்பு

சண்டிலிப்பாய், பெப். 13
மானிப்பாய் லயன்ஸ் கழகத்தின் விசேட கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற போது இரண்டாவது கட்டமாக கண்பார்வை குறைந்தவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. அத்துடன் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள இருவருக்கு தலா 500 ரூபா கொண்ட உதவிப் பொருள்களும், அன்பளிப்புச் செய்யப்பட்டன. கழகத் தலைவர் லயன். செ. ஞானராசா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக வலயத் தலைவர் லயன். ஏ. தங்கேஸ்வரன் கலந்து கொண்டார்.

[ஐ-135]

## கணக்காளர் இடமாற்றம்

நவாலி, பெப். 13
யாழ். செயலகத்தில் பிரதம கணக்காளராக பணியாற்றிய சுவாமிநாதன் சிவபாலன் இம் மாதம் முதல் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கணக்காளராக பொது திறைசேரியினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் (ஐ-100)

## மாதாந்த உதவிப் பணம்

கொழும்புத்துறை, பெப். 13
யாழ் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான தைமாத தருமப்பணம் கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் இப்பகுதிக்கு உட்பட்ட சகல தபால் அலுவலகங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பணத்தைப் பெறுபவர்கள் தத்தமது பகுதித்தபால் அலுவலகங்களுக்கு நேரில் சென்று பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பிரதேசச் செயலாளர் பா. செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார்.

(ஐ-30)

## ஆலயம் புனரமைப்பு

சண்டிலிப்பாய் வடக்கு ஆனைக்குழாய் முருகமூர்த்தி ஆலயம் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. கடந்த யுத்தகால அனர்த்தங்களின் போது கடுமையாக சேதமடைந்த இந்த ஆலயத்தை புனரமைத்து பூசைகளையும் உற்சவங்களையும் விரைவில் நடத்துவதற்கு ஆலய பரிபாலனசபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. (ஐ-135)

## மாணவர் கௌரவிப்பு

வடமராட்சி, பெப். 13
கெருடாவில் தெற்குக் கிராமத்தில் 5 ஆம்ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மூன்று மாணவர்களைப்பாராட்டி கௌரவிக்கும் வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கெருடாவில் தெற்கு விவேகானந்தா சனசமூக நிலைய மண்டபத்தில்நடை பெறவுள்ளது.

கெருடாவில் தெற்கு விவேகானந்தர் சனசமூக நிலையம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (ஐ-173)

# கூட்டுறவு அபிவிருத்தி நிலையத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை

## 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப். 13
கடந்த சில வருடங்களாக இயங்காமலிருந்த யாழ் கூட்டுறவு அபிவிருத்தி நிலையத்தை புனரமைப்பதற்கு தேசிய கூட்டுறவுச் சபை நடவடிக்கை எடுத்துவருகிறது.

இந்த நிலையக்கட்டடத்தைப் புனரமைப்பதற்கென பத்து லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்வதெனச் சபையின் விசேட பொதுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

கூட்டுறவு அபிவிருத்தி நிலையப் பணியாளர்களுக்கு தொடர்ச்சியாக சம்பளம் வழங்கப்படவுள்ளதுடன் நிலுவையாக உள்ள சம்பளத்திற்குரிய முற்பணமும் வழங்கப்படும் எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —
கூட்டுறவு அபிவிருத்திநிலையச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் லயனல் அமரசிங்க இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

(ஐ 5)

## சிவ தீட்சை

கண்டிலிப்பாய், பெப் 13
அளவெட்டி சைவவாலிபர் சங்கமும், அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டர் சபையும் இணைந்து எதிர்வரும் சிவராத்திரி தினத்தன்று கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் சிவதீட்சை நடத்த நடவடிக்கை எடுத்துள்ளன. [ஐ-135]

## விளையாட்டு நிகழ்வுகள்

வலிகாமம்தெற்கு, பெப். 13
உடுவில் கல்விக்கோட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

கரபந்தாட்ட போட்டியில் 17 வயது, 19 வயது பிரிவினர் கலந்து கொள்ளும் போட்டிகள் யாவும் இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றன. இறுதிப் போட்டிகள் இம் மாதம் 23 ஆம் திகதி நடைபெறும்.

15 வயது, 17 வயது, 19 வயதுப் பிரிவினர் கலந்து கொள்ளும் வலைப்பந்தாட்ட போட்டிகள் யாவும் இராமநாதன் கல்லூரியில் நடைபெறுகின்றன. இறுதிப் போட்டிகள் மார்ச் மாதம் இரண்டாம் திகதி நடைபெறும். (ஐ-152)

# ஆசிரியர் பதவி உயர்வு பெற பயிற்சி வழங்க ஏற்பாடு

பருத்தித்துறை, பெப். 13
இலங்கை ஆசிரியர் சேவையில் பதவி உயர்வு பெறுவதற்கான பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சும், ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்களும் இணைந்து நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

★ எமது மாகாணச் சூழ்நிலைக்கு ஏற்ப ஆசிரியர்களுக்கு நிறுவன ரீதியில் பயிற்சிகளை வழங்குதல்.

★ ஏற்கனவே பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு மீள் பயிற்சியை அல்லது புத்தூக்க வகுப்புகளை வழங்குதல்.

★ விடுமுறைக் காலத்தில் இரண்டு அல்லது மூன்று கிழமைகள் ஆசிரிய கலாசாலைகளில் தங்கி வதிவிடப் பயிற்சியைப் பெறல்.

★ ஆசிரியர்களுக்கு சனி, ஞாயிறு நாள்களில் தொடர்ச்சியாக ஆறு மாத காலத்திற்குப் பயிற்சி வழங்கல்.

★ நகரப்பகுதியில் வசிக்கும் ஆசிரியர்களுக்கு தினமும் இரண்டு அல்லது மூன்று மணிநேரப் பயிற்சி வழங்கல்.

★ இப் பயிற்சிகளை வழங்குவதற்கு விரிவுரையாளர்கள் மட்டும் போதாது. அதற்காக வளவாளர்களைத் திரட்டுதல்.

★ விரிவுரையாளர்கள் இணைப்பாளர்களாக இருந்து பயிற்சிகளை வழங்குதல்.

மேற்கண்டவாறு கருத்துக்களை யாழ். ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர்கள் அண்மையில் கலாசாலை அதிபர் காரை சுந்தரம்பிள்ளை தலைமையில் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவிடம் தெரிவித்துள்ளனர்.

(ஐ-118)

## விளையாட்டுப் போட்டிகள்

மல்லாகம், பெப். 13
உடுவில் மகளிர் கல்லூரி ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான இல்ல விளையாட்டுப் போட்டி நாளைசனிக்கிழமை பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் சி. வி. செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது

(ஐ-86)

★ ★ ★

மல்லாகம், பெப். 13
ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை அதிபர் க. சிவநடேசன் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-86)

# பொருளை அறவழியில் தேடி இறைபணியில் செலவிடுங்கள்

## ஞானக் கதிர்

மனித வாழ்வு மகத்துவமானது; தெய்வீகமானது; தனித்துவமானது. தன்னிகரில்லா இறைவன் எம்மீது கொண்ட பேரன்பினால் எமக்கு இந்த மனிதப்பிறவியைத் தந்திருக்கின்றான். அப்பிறவியைப் பயன்படுத்தி மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவது எம் எல்லோரதும் தலையான கடமையாகும்.

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ் சோதியை ஆதி முதல்வனாகக் கொண்டு துலங்கும் நெறி இந்து நெறி. மனித வாழ்க்கை முழுமை பெற அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால் வகைப் புருடார்த்தங்களை எடுத்துக் கூறியுள்ளது அது. இப் புருடார்த்த வழியிலே வாழ்வை நடத்தும் ஒருவன் பிறவாப்பேறு பெறுகின்றான்.

அறம் என்பது தர்மம், நீதி, நேர்மை, உண்மை, கொடை என்னும் பல்வேறு பொருள்களை உடையது. ஒருவனது வாழ்வின் மூலமும் அவன் தேடிய செல்வத்தின் மூலமும் பிறருக்கு நன்மை ஏற்படுமிடத்து அதுவே அறவழிப்பட்ட வாழ்க்கையாகும். ஔவைப்பிராட்டி 'ஈதல் அறம்' என்பாள்.

[illegible]
[illegible] கடைப்பிடிக்கும்போது இவ்வுலகவாழ்வில் எம்மைப் பெருமிதப்படுத்தும் பொருள்வளம் எம்மை வந்துசேரும். அத்தகைய பொருளை நாம் எவ்விதம் தேடிக் கொள்கின்றோம் என்பது பிரதானமானது. இன்றைய உலகில் எவ்வாறெல்லாம்பொருளைச் சேர்த்துக்கொள்ளலாம் என்ற மனப்பாங்கு உடையவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

திருநாவுக்கரச நாயனார் தனது தேவார மொன்றில்

''மாட்டைத் தேடி மகிழ்ந்து
நீர் நும்முளே
நாட்டுப் பொய் யெல்லாம்
பேசிடும் நாணிலீர்
கூட்டை விட்டுயிர் போவதன்
முன்னமே
காட்டுப் பள்ளி யுளான்
கழல் சேர்மினே''

எனக் கூறுவதன் மூலமாக பொருளின் சிறப்பையும், அதனைத் தேடிக் கொள்ளும் முறைமையையும் அப்பொருளாக நாம் அடைய வேண்டிய இறை இன்பத்தையும் எடுத்துக் கூறிச் சென்றுள்ளார்.

எவ்வாறேனும் பொருளைச் சேர்ப்பதே எமது வாழ்க்கையின் இலட்சியம் என்று கருதக்கூடாது. பொருளைத் தேடுவதற்காகப் பொய்யும் பித்தலாட்டமும் பேசுவது வெட்கங்கெட்டவர்கள் செய்யும் செயல். உடலை விட்டு உயிர்போய் விட்டால் பொய்யும் பித்தலாட்டமும் பேசிச் சேகரித்த பொருளை யார் அனுபவிப்பது? எனவே அறவழியில் பொருளைத் தேடவேண்டும்.

தேடும் பொருளை இறை பணிக்கும் இறை அடியார் பணிக்கும் செலவு செய்வதன் மூலமாக நிலையான இன்பத்தைப் பெற முயலுதல் வேண்டும். இவ் இன்பமே எமக்கு இன்பம் பயக்கும்வீடு பேறாக அமையும்.

வீடு பேறு என்பது இந்த மனித உடல் நீங்கிய பின்பு உடலோடு கூடி பல நாள்கள், பலகாரியங்கள் ஆற்றிய உயிர் இறைவனது பாதத்தினைச் சென்றடைவதாகும். இவ்வாறு சென்றடைவதால் உயிர் மீண்டும் பிறவாமை என்னும் பேற்றைப் பெற்றுக் கொள்கின்றது. எனவே அந்த உயிரோடு கூடிய உடலை பேணிக் காத்தலும் அவசியம்.

- ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதானவர் விடுவிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், பெப். 1௧ இராணுவத்தினரால் கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கென அழைத்துச்செல்லப்பட்டவர் நேற்று வரை மூன்று நாள்களாகியும் விடுவிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

லேக்கமிச்சமிக வடமராட்சி கிளைத்தலைவரும், வியாபாரிமூலை மைலன் பேக்கரி உரிமையாளருமான கதிர்காமத்தம்பி பாலச்சந்திரன் என்பவரே விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவராவார். (ஐ-15)


உ

# யா| மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை

## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி - 1998

காலம்: 14 - 2 - 1998 சனிக்கிழமை
பிற்பகல் 1-00 மணி

இடம்: இராமநாதன் கல்லூரி மைதானம்

தலைவர்: திரு. க. நாகராசா (கல்லூரி அதிபர்)

முதன்மை விருந்தினர்:
திரு. வே. பொ. பாலசிங்கம்
(மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு ஆ. கமலநாதன்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்)

திரு. சி. சிவஙகாராசா
(தலைவர், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

கௌரவ விருந்தினர்:
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவி, துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(சி-2874)



# புலமைப்பரிசில் 1998
## 14 ஆவது பயிற்சிப் பரீட்சை
(யாழ். மாவட்டம்)

### அதிகூடிய புள்ளி பெற்றோர்

1. செல்வன் தளையசிங்கம் அஜந்தன் — 174 புள்ளி
(யா. இந்து. ஆரம்ப பாட.)
2. செல்வன் காந்தருபன் முகிலன் — 169 புள்ளி
(உடு. மக. கல்லூரி)
3. செல்வி மகேந்திரம் அகன்ஜா — 164 புள்ளி
(யா. கொ. இந்து. ஆர. பாட.)
4. செல்வன் குலதாஸ் டில்ஷான் — 162 புள்ளி
(உடு. மகளிர் கல்லூரி)
5. செல்வன் தளையசிங்கம் காந்தருபன் — 162 புள்ளி
(யா. கொ. இந்து. ஆர. பாட.)
6. செல்வன் சோபபாலன் ஜெசந்த் — 162 புள்ளி
(யா. புனி. ஜோன். பொ. வி)

இவர்களைப் பாராட்டுகின்றோம்.

அடுத்த பரீட்சை 15-02-1998

மேலதிக விவரங்களுக்கு:
பரீட்சைப்பகுதி: BOND யாழ்ப்பாணம்.
[53351]



நாடக இரசிகர்களே!
பிரியர்களே!!

# இதோ "மலநீக்கம்"
(நாடகம்)

ஒவ்வொரு தனிமனிதர்களினதும் மனச்சாட்சிகளினது போராட்டம் பற்றிய கதையிது.

பூக்காரன்: பூவை காதில வையாத மனசில வை...

அண்ணாவியார்: நாட்டில மன்னனோ நாடகத்தில மன்னனோ கக்கூஸிற்கு இருந்துதான் - ஆகோணும்.

நெறியாள்கை: க. ரதீதரன்

தயாரிப்பு: நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

இடம்: கைலாசபதி கலையரங்கம், யாழ். பல்கலைக்கழகம்.

நாள்: 14-02-1998 சனிக்கிழமை

புதியநேரம்: மாலை 2. 30 மணி

பிரவேசம்: ரூபா 20.00 மட்டுமே

(ஆசனங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன)

(53347)


## கற்பித்தல் உபகரண கண்காட்சி

பருத்தித்துறை, பெப். 13

கோப்பாய் கல்வி வட்டார பாடசாலைகளுக் கிடையேயான கற்பித்தல் உபகரணம் தயாரித்தல் போட்டியும் கண்காட்சியும் நாளை சனிக்கிழமை காலை 8.45 மணியளவில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இக் கண்காட்சி இரு தினங்கள் நடைபெறும். பாடசாலை மாணவர்களுக்கு இலவச அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்விசார் உத்தியோகத்தர்களும் பெற்றோர்களும் அனுமதிக்கப்படுவார்கள்.

(ஐ-118)

## மன்னார் ஆயர் நெடுந்தீவு விஜயம்

நெடுந்தீவு, பெப். 13

மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவண இராயப்பு யோசெப் அடிகளார் நாளை சனிக்கிழமை நெடுந்தீவுக்கு வருகைதரவுள்ளார்.

நெடுந்தீவைச் சேர்ந்த அவர் ஆயராகப் பதவியேற்ற பின் முதல்தடவையாக இங்கு வருகை தரவுள்ளார். மத வேறுபாடின்றி ஆயரை வரவேற்க மக்கள் தயாராகி வருகின்றனர். (ஐ-111)

## பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம், பெப். 13

ஆனைக்கோட்டை அ.மி. த.க. பாடசாலையில் கடமையாற்றி ஓய்வுபெறும் உப அதிபர் கா. நித்தியானந்தன் பிரிவுபசார விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அதிபர் சி. நாகையா தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஐ-5)

## இணுவிலில் வைதீக வகுப்பு

யாழ்ப்பாணம், பெப். 13

உரும்பிராய் பிராமண இளைஞர் சமாஜம் நடத்தும் வைதீக வகுப்புகள் நேற்றுவியாழக்கிழமை இணுவில் சிவகாமி அம்மன் கோயில் ஆரம்பமாகியுள்ளன.

(ஐ-4)

### மீண்டும்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

படையான மற்றும் ஸ்திரமான அரசு அமையும் என தமது கட்சியின் தேர்தல் அறிக்கையை அவர் நிலைநிறுத்திப் பேசினார்.

ஸ்திரமான ஊழலற்ற அரசை அமைக்க பா.ஜ.க. வினால்தான் முடியும். தகுதி வாய்ந்த பிரதமரின் கீழ் நிலையான அரசை மத்தியில் அமைப்பதாக காங்கிரஸ் கூறுகிறது. ஆனால் நாட்டில் தற்சமயம் ஏற்பட்டுள்ள சீரழிவு மக்களின் அவலங்களுக்கும் அதே கட்சிதான் காரணம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)


# பொருளியற்கல்லூரி
நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

பொருளியல்
S. வரதராஜன்

A|L 2000
99, 98
பிரிவு II

ஆரம்பம்:
14-02-98

நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

ஏனைய பாடங்களும் [illegible]


## வெட்டப்படும் உணவு முத்திரை

இலங்கை அரசினால் முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட உணவு முத்திரை திட்டத்தினால் மக்கள் சிலர் நன்மையடைந்தனர். அதுவும் கூட சில கிராம உத்தியோகத்தர்களின் செல்வாக்குக் காரணமாக உண்மையாக முத்திரை பெறத் தகுதியில்லாதவர்களுக்கும் நிவாரணம் கிடைப்பதுண்டு. மக்களுக்கு ஏதோ நன்மைதானே எனக் கருதிய பலர் அதுபற்றிப் பொருட்படுத்தவில்லை.

எமது பிரதேசத்திலே யுத்தம் ஆரம்பமாகி இலவச நிவாரணம் கொடுக்க ஆரம்பித்ததிலிருந்து கிராம உத்தியோகத்தர்கள் சிலர், ப.நோ.கூ. சங்க முகாமையாளர்களுடன் எழுத்தில் இல்லாத ஒப்பந்தங்களைச் செய்து தமக்கும், அவர்களுக்கும் சில போலிப் பெயர்களில் அட்டைகளை வழங்கி நிவாரணப் பொருள்களைப் பெற்றனர். இவ்வாறு பல பிரதேசங்களிலும் நடைபெற்றது.

ஆனாலும் பெரும் இடப்பெயர்வின் பின்னர் பலர் இந்த நிவாரணத்தை நம்பியே உயிர்வாழ்கின்றனர். இது யாவரும் அறிந்ததே.

யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரச அதிபர் பிரிவுகளில் சங்கானை பிரதேச செயலகம் மட்டும் சென்ற மாதத்தில் அரச ஊழியர், கடை உரிமையாளர்கள், வெளிநாட்டு உறுப்பினர்களை கொண்ட குடும்பங்களுக்கு நிவாரண முத்திரை நிறுத்தப்பட்டது. பின்னர் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்பட்டது. இதிலே கவலைக்குரிய விடயம் என்னவென்றால் முதலில் சைக்கிள் திருத்தும் சிறிய கடைக்காரருக்கு கூட வெட்டப்பட்டது தான்!

இது அரச கட்டளையை உடனடியாக நிறைவேற்றும் சரியான காரியமாக இருந்தாலும் கூட, ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளிலே இவ்வாறு நடைமுறைப்படுத்த முன்னர் இப்பிரதேச மக்கள் மட்டும் முத்திரையை ஏன் இழக்க வேண்டும்? உணவு முத்திரை விரைவிலே நிறுத்தப்பட இருப்பதாகக் கூறப்படுகிறது. உண்மையாயின் இவ்வளவு காலமும் பெற்றவர்களுக்கு கொடுத்தால் என்ன? அரசுக்கு என்ன நட்டம் ஏற்பட்டு விடுமா? அப்படியாயின் ஏன் ஏனைய பிரிவுகளிலே இக்கட்டளை நடைமுறைப்படுத்தவில்லை?

அதிலும் கவலைக்குரிய விடயம் சில கிராம உத்தியோகத்தர்கள் தங்கள் உறவினர், நண்பர்கள் சிலர் உணவு முத்திரை பெறத் தகுதியில்லாத போதிலும் அவர்களுக்கு வழங்கியிருக்கின்றனர். கிராம உத்தியோகத்தர்களுடன் உறவு, நட்பு இல்லாத ஒரு சில குடும்பங்கள் மட்டும் பாதிக்கப்படுவது சரிதானா?

மக்களின் பிரதிநிதிகளாக தங்களை கூறிக்கொள்பவர்கள் இவ்வாறான பிரச்சினைகளில் தலையிட்டு நீதியினை வழங்க முடியாதா?

சித்தன்கேணி எஸ். சுதர்சன்

## யாழ்ப்பாணம் - கோதீவு பஸ்சேவை

கடந்த காலங்களில் யாழ்ப்பாணம் - கேரதீவு பாதையில் (இல. 809இல்) இரண்டு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தன. மேலும் பாதை இல 805 என்னும் ஒரு பஸ் நாவற்குழியில் இருந்து தனங்கிளப்புச் சந்தி ஊடாக சாவகச்சேரியை அடைந்து கச்சாய் ஊடாக கொடிகாமத்துக்கும் சேவையாற்றி வந்தது. இதைவிட பாதை இல 810 என்னும் பஸ் ஒன்று சாவகச்சேரிக்கும் கேரதீவுக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டும் வந்தது.

யாழ்ப்பாணம் - கேரதீவு பஸ் சேவை பலவருடகாலமாக இல்லாதிருப்பது பெரும் வேதனை தருவதாக உள்ளது.

இச்சேவை கேரதீவு இறங்குதுறைக்குச் செல்லாது விடினும் சாவகச்சேரி சென்றோ அல்லது தனங்கிளப்பு சந்தி வரையிலாவதோ சேவையை மேற்கொள்ள வடபிராந்திய போக்குவரத்து மேலதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

பாடசாலைப் பிள்ளைகள், யாழ். மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள், ஏனைய பொதுமக்கள் தங்கள் குழந்தைகளுடன் இப்போது நாவற்குழி சந்தி சென்று பஸ் எடுக்க வேண்டியுள்ளது. தொலைவான இடங்களில் உள்ளவர்கள் அதிக தூரம் நடந்த களைப்பினால் தெருவோரங்களில் வசிக்கும் மக்களின் வீடுகளில் தண்ணீர் கேட்கும் பரிதாபகரமான காட்சிகளைத் தினமும் காணமுடிகிறது.

முன்னைய காலங்களில், யாழ்ப்பாணம் - கேரதீவு பஸ் சேவை நடைபெற்ற நேரங்களில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை எதிர்பார்த்த மிகை ஊதியம் (Target Amount) கிடைத்ததைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எனவே ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது பஸ் சேவை நடத்த ஒழுங்கு செய்யுமாறு மக்கள் சார்பில் பணிவுடன் வேண்டுகிறேன். இச்சேவை நிறைவேற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவறாது நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புகிறேன்.

ந. சத்தியசீலன்,
நாவற்குழி.


# பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

பொருளியல்
S. வரதராஜன்

ஆரம்பம்; 14 - 02 - 98 சனி

G. A. Q (வேராதனை) வினாவிடை வகுப்பு
சனி 9-00 A.M.

B A (பேராதனை) வினா விடை வகுப்பு சனி 8-00 A.M.

G.A.Q. I IstIA COM. (யாழ்) சனி 3 - 00 P. M.

B. A], B. Com. PART I (யாழ்) சனி 4.00 P. M.

(49955)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மீண்டும் ஆள் கடத்தல்

மட்டக்களப்பு – செங்கலடிச் சந்தியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மூன்று இளைஞர்களை, நீல நிற பஜிரோ வாகனத்தில் சாதாரண உடையில் வந்தவர்கள் கடத்திச்சென்றனர்.

மட்டக்களப்பு மாநகர சபைப் பிரிவிலுள்ள கருவப்பங்கேணி ரயில்வே கடவைக்கு அருகில், வெள்ளை வானில் சாதாரண உடையில் வந்தவர்கள் பாடசாலை மாணவன் ஒருவனைக் கடத்திச் சென்றனர்.

மட்டக்களப்பில் இருந்து நாளாந்தம் இத்தகைய செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இந்த ஆள் கடத்தும் பயங்கரம் நான்கு ஆண்டுகால இடைவெளியின் பின்னர் கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று வருகிறது.

இது குறித்து மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் பிரதிப்பாதுகாப்பு அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

வெள்ளை வான்களில் வந்து தமிழ் இளைஞர்களைக் கண்ட கண்ட இடங்களில் கைது செய்யும் கலாசாரம் மீண்டும் மட்டக்களப்பில் தலைதூக்கி உள்ளதால் பெற்றோர் மத்தியில் பெரும் பதற்றம் நிலவுவதாகவும், இதனைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தமது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறு வான்களில் வந்து இளைஞர்களை, மாணவர்களை கண்டபடி கடத்திச் செல்பவர்கள் — கைது செய்பவர்கள் - பாதுகாப்புப் படையினரும், அரசாங்கத்தோடு ஒத்துழைத்துக் கொண்டு அதன் அதிகார வரம்பிற்குள் அமையாது இயங்கும் சில தமிழ் இயக்கங்களுமே என்பதனை யோசப் பரராஜசிங்கம் தமது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ் இளைஞர்கள் கண்டபடி கைது செய்யப்படுவதும், கடத்திச் செல்லப்படுவதும், பின்னர் காணாமல் போவதும் மட்டக்களப்பில் மட்டும் நடைபெறும் தொல்லைகள் அல்ல. தமிழ்ப் பிரதேசங்கள் எல்லாவற்றிலும் நடைபெற்றன; நடைபெறுகின்றன. இருந்தாற்போல வந்து தாக்கும் நோய்கள்போல கண்டபடி கைதும், ஆள்கடத்தலும் தமிழ் இளைஞர்களையும் அவர்தம் பெற்றோரையும் வதைக்கின்றன; வேக வைக்கின்றன.

இந்த வதைகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தரப்பில் அவ்வப்போது உறுதி அளிக்கப்பட்டாலும், மீண்டும் மீண்டும் அவை தலையெடுப்பது வழமையாகிவிட்டது. இடம்மாறி இடம் வெவ்வேறு கால இடைவெளிகளில் இவை தோற்றம் எடுப்பதை அவதானிக்கலாம்.

அவசரகாலச் சட்டம், அதன் கீழான பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியன இருக்கும் வரை தமிழர்களுக்கு எதிரான அடக்கு முறைகள் தொடரும் என்பதனையே இது புலப்படுத்துகிறது.

வீதியால் செல்பவர்களை காரணம் இன்றிப் படையினர் தமது இஷ்டப்படி கைது செய்யும் — கடத்தும் — அநீதி ஏற்றுக் கொள்ளக் கூடியதா.

அது ஏற்றுக்கொள்ளப்படின் சட்டபூர்வமானதெனில், தமிழர்களை அடக்கி ஒடுக்கி, அவர்களை வதைப்பதற்கு, கொல்வதற்கு, அழிப்பதற்கு என்றே பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையில் உள்ளது என்றே சொல்லவேண்டும்!

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு மாதாந்தம் நாடாளுமன்றில் சாதகமாக வாக்களிக்கும் தமிழ்க் கட்சிகள், சபையில் வேகவதை விட, இதனைத் தடுக்கச் செயலளவில் என்ன செய்யப் போகின்றன? இதனைத் தடுக்கும் வல்லமை தமக்கு இல்லை என்று ஒப்புக் கொள்ளப் போகின்றனவா?

### அதிகாரப்பரவலாக்கல் குறித்து

# அரசசார்பற்ற அமைப்புக்களுடன் ஐ.தே.க. இன்று கலந்துரையாடும்!

கொழும்பு, பெப். 13

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் குறித்து ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி பல முன்னணி அரச சார்பற்ற அமைப்புக்களைச் சந்தித்து இன்று கலந்துரையாடுகின்றது.

அதிகாரப் பரவலாக்கல் குறித்து இதுவரை தெரிவித்த யோசனைகள் பற்றியும், எதிர்காலத்தில் முன் வைக்கப்பட இருக்கும் யோசனைகள் பற்றியும் இந்த அமைப்புக்களுடன் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட உள்ளன.

பல முன்னணி அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வார்களென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெரோன் பெர்னாண்டோ, மகிந்த சமரசிங்க, தயா பெல்பொட ஆகியோர் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள உள்ளனர்.

இதற்கிடையில் அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளுக்கு மாற்று யோசனைகளை முன் வைப்பதற்கென்று ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்வைக்கப்பட்ட குழு அடுத்தவார முற்பகுதியில் கூடும்.

இந்தமாத இறுதிக்குள் இதுவரை தீர்மானிக்கப்படாது இருக்கும் யோசனைகள் பற்றி முடிவு செய்வது என்று இந்தக் குழு தீர்மானித்திருக்கின்றது. இந்தக் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றார்கள். (இ-7)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். பல்கலைக்கழக புற நிலைப் படிப்புகள் அலகினால் நாளை சனிக்கிழமை நடத்தப்பட இருந்த தொடர்பியலுக்கான ஆங்கிலத் தொகுதி XXVII நிறைவு நாளும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் இது நடைபெறவுள்ளது.

புற நிலைப் படிப்பின் இணைப்பாளர் எஸ். ரீ. பி. இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற உள்ள இந் நிகழ்வில் பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்குவார். (இ-9)

## கற்கை நெறி

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். பல்கலைக்கழக புற நிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் நில அளவையும் படவரைகலையும், சுற்றுப்புறச் சூழல் முகாமைத்துவமும் என்ற அடிப்படைக் கற்கைநெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இக்கற்கைநெறிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் புறநிலைப் படிப்புகள் அலகில் அதற்குரிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விண்ணப்பித்துக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ் வட்ட லியோ கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை சென். அன்ரனீஸ் மைதானத்தில் பிற்பகல் 4 மணி முதல் நடைபெறும் ஆட்டத்தில் றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாடும்மீன் விளையாட்டுக்கழக (மஞ்சள்) அணி மோதும். (ஐ)

## கூட்டம்

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிறு முற்பகல் 10-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. [ஐ]

### அழகியற் கல்வி, பட்டதாரி டிப்ளோமா:

## நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 13

தமிழ்மொழி மூல அழகியற் கல்வி, பட்டதாரி, டிப்புளோமா உதவி ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 18 ஆம் திகதி வலயம் இரண்டு பணிமனையில் நடைபெறவிருக்கிறது.

இந்த நேர் முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான கடிதங்கள் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் சம்பந்தப் பட்டவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு.

நடனம்

செ. சசிகலா, (மாவியத்தை, சங்கானை), க. புவனேஸ்வரி, (வேம்பன் வீதி, உரும்பிராய் தெற்கு), திருமதி ம. திலகராணி, (கரவெட்டி வடக்கு), திருமதி க. சுபத்திரா, (சண்டிலிப்பாய் வடக்கு), இ. துஷ்யந்தி (இராசவாசா, இளவாலை), இ.சசி, (அராலி மத்தி, வட்டுக்கோட்டை.), திருமதி பி. மலர்விழி, (வறுத்தலைவிளான், தெல்லிப்பளை), மா. பிரேமநளினி, (பன்னாலை வீதி, தெல்லிப்பளை.)

இசை

மாணிக்கராஜா தயாளினி, (பழைய வீதி, கோப்பாய் தெற்கு.), வி. சுகந்தி, (இணுவில் தெற்கு.). செல்வரத்தினம் மாசிலாமணி, (களஞ்சியம் தோட்டம், கரவெட்டி கிழக்கு), ஜெயம் கனகசோதி லம் (அருளகம், சிவன் கோயிலடி, வட்டு மேற்கு.) து. யோகாம்பிகை, (நெல்லியோடை, அச்சுவேலி தெற்கு.), திருமதி சா. பரஞ்சோதி (டச்சு வீதி, மூளாய், சுழிபுரம்.), அ. தாரணி, (புதுத்தோட்டம், தெல்லிப்பளை.) திருமதி இ ஸ்ரீரஞ்சனி (பிரதான வீதி, பொலிகண்டி.), பா. வசந்தகுமாரி, (860, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.), திருமதி கி. லதா, (விக்னேஸ்வரா வீதி, தையிட்டி, காங்கேசன்துறை.), சின்னையா துரைராசா, (ஆஸ்பத்திரி வீதி, மூளாய், சுழிபுரம்.), வே. கோகிலராணி, (குலனை, அராலி வடக்கு)

திருமதி சி. குகநேசன் (சாளுவன், சுழிபுரம்), நா. சுகிர்தா (தேவாலய வீதி, உடுவில்.), செல்வி ந. பிரேமா, (நடேசபதி, தொல்புரம் கிழக்கு.), க. அழகேஸ்வரி (நாவற்கட்டை, கோப்பாய் வடக்கு.), இ. சத்தியதேவி, (மார்க்கம்புரை, கோப்பாய் வடக்கு.), த. பங்கையற்செல்வி, டச்சு வீதி, மூளாய், சுழிபுரம்.), அ. மீனலோஜினி, (பிருந்தாவனம், ஏழாலை மேற்கு.), ம. தாணுநாதசர்மா, (கண்ணகியம்மன் கோயில், இணுவில் மேற்கு.), நா. கயல்விழி, (உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஒழுங்கை, தெல்லிப்பளை.) (இ-3)

# இந்து சமயக் கல்விப் போதனைக்கு பல்கலை. சார்ந்த நிறுவனம் தேவை

### மக்கள் அழுத்தம் வேண்டும் என்கிறார் துணைவேந்தர்

நல்லூர், பெப். 13

இந்து சமயக் கல்வி, சமஸ்கிருதம், சைவ சித்தாந்தம் போன்றவற்றை போதிப்பதற்கு, யாழ். பல்கலைக்கழகம் சார்ந்த நிறுவனம் ஒன்றை இந்து கலாசார அமைச்சின் ஊடாக அமைப்பதற்கு பொது மக்களும் சமய அமைப்புகளும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

அண்மையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆத்மஜோதி முத்தையா ஞாபகார்த்த மலர் வெளியீட்டு விழா நடைபெற்ற போது, அதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே துணைவேந்தர் மேற்கண்டவாறு சொன்னார்.

இந்து சமயப் பேரவையின் ஆதரவில் அதன் தலைவர் அருட்கவி சி. விநாசித்தம்பி தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

ஞாபகார்த்த மலரை வெளியிட்டு வைத்த துணைவேந்தர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

தமிழும் சைவமும் வளர வேண்டும் என்பதற்காக அவை கூறும் நெறியில் வாழ்ந்தவர் ஆத்மஜோதி முத்தையா. யாழ். பல்கலைக் கழகத்தின் உத்தியோக பூர்வ கொள்கையும் அதுவே. வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலும் இக் கொள்கையை நிறைவேற்ற முடியாது. எனவே தமிழ் இந்துக் கல்விக்குள் அடங்கும் ஒவ்வொரு பிரிவுகளையும் யாழ். பல்கலைக் கழகத்தில் கற்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும் பௌத்த, இஸ்லாம் மதங்களுக்கு உள்ளது போன்று எமது மதத்திற்காக பல்கலைக்கழகத்தில் பெரும் வசதிகள் செய்து தரப்படவில்லை. இது விடயத்தில் மக்களின் அழுத்தம் தேவை.

தமிழ், சமயம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் வாழ்ந்த ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பணி முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் எமது சமூக நாகரிகத்தை முன்னெடுக்க வேண்டும் — என்றார்.

இந்து சமயப் பேரவை உப தலைவர் ஆ. மகாலிங்கம் பேசுகையில் தெரிவித்ததாவது:

இந்து சமய வரலாற்றில் முதல் தடவையாக குடிசைகளுக்குச் சென்று துன்பச் சூழலில் வாழும் மக்களுக்கு சைவ சமயத்தின் தத்துவங்களையும் சுகாதாரக் கோட்பாடுகளையும் எடுத்துக் கூறி அவர்களின் நல்வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணித்தவர் ஆத்மஜோதி முத்தையா அவர்கள்.

இந்துக்கள் படும் இன்னல்களையும் எமது ஆலயங்கள் அழிக்கப்படுவதையும் எதிர்காலத்தில் எமது மதம் பாதுகாக்கப்பட வேண்டியதையும் உணர்ந்து இந்து சமயப் பேரவையைத் தோற்றுவித்து இந்துக்களின் குரல் உலகெங்கும் ஒலிக்கக் காரணமானவர் ஆத்மஜோதி ஐயாவே. இறுதிவரை சைவத்திற்கும் தமிழுக்குமாகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவருமான அவரது நினைவாக, ஐயாவின் செயற்பாடுகளைப் பேசும் மலராக இதை வெளியிடக் கிடைத்தது பெரும் பேறாகும் — என்றார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், இந்து சமயப் பேரவைச் செயலர் இ. சத்திகிரிவன், திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோரும் பேசினார்கள்.

முன்னதாக துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை அமரர் ஆத்மஜோதி முத்தையாவின் உருவப் படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

துணைவேந்தரிடம் இருந்து ஞாபகார்த்த மலரின் முதல் பிரதியை க. கங்கைவேணியன் பெற்றுக் கொண்டார். (அ-103)

## நாளை

### மாசி 2

சனிக்கிழமை

திதி: திருதியை முன் இரவு 9.39 வரை.

நட்சத்திரம்: உத்தரம் பின் இரவு 1.46 வரை.

சுபநேரம்: 3.33-5.03

ராகுகாலம்: 9.33-11.03

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்)
லாம் குறுக்குத்தெரு வேம்படியில் மோட்டார் சைக்கிளில் வந்த ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் எமது உறுப்பினருடன் மோதும் அளவுக்கு அருகே நெருங்கிய போது எமது உறுப்பினர் மோட்டார் சைக்கிளை விட்டிறங்கி அவர்களுடன் பேச முற்பட்டார்.

அப்பொழுது அவ்விடத்துக்கு வந்த மேலும் சில ஈ பி. டி. பி உறுப்பினர்கள் கைக்குண்டுகள், கைத்துப்பாக்கி ஆகியவற்றை எடுத்த போது கைகலப்பு ஏற்பட்டது. இதில் சில ஈ. பி டி. பி. உறுப்பினர்கள் காயமடைந்தனர். இடையிடையே ஏற்படும் சிறு சிறு பிரச்சினைகளுக்கு உயர் மட்டப்பேச்சுக்கள் மூலம் இணக்கம் காணப்பட வேண்டும். பிரச்சினைகளை கருவிகள் மூலம் கையாள முயல்வது இன்றைய காலகட்டத்துக்கு உகந்ததல்ல.

வேலணையில் எமது உறுப்பினர் தாக்கப்பட்ட போதும், நெடுந்தீவில் எமது ஆதரவாளர் தாக்கப்பட்ட போதும். நாம் பதில் நடவடிக்கையில் இறங்கவில்லை.

மோதல்களை கூடிய அளவுக்குதவிர்த்துவந்துள்ளோம். புதன் இடம்பெற்ற சம்பவத்திலும் பேசமுற்பட்ட போது கருவிகள் எடுத்ததினால் கைகலப்பு மூண்டது. பிரச்சினைகள் தோன்றினால் பேச்சுக்கள் மூலம் இணக்கம் காணப்படவேண்டும். அதுவே இன்றைய தேவை- என்றுள்ளது (இ)

## கிரிக்கெட் சங்க செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். கிரிக்கெட் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

சங்க செயற்குழு உறுப்பினர்கள் இக்கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (இ-3)

## மாங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)
மாங்குளம் நகர் நோக்கி முன்னேறுவதாகவும்

விரைவில் மாங்குளம் நகரைப் படையினர் கைப்பற்றக் கூடிய ஏது நிலை இருப்பதாகவும்—வவுனியா தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் எதிர்ப்பு பெரியளவில் இல்லை என்றும் —

இடை இடையே ஷெல் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற்கொள்வதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் புலிகள் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் இருபடையினர் உயிரிழந்தனர் என்றும் —

17 படையினர் காயமடைந்தனர் என்றும் — படை வட்டாரங்கள் தெரிவித்தன.

படையினரின் பதில் தாக்குதலில் 10 விடுதலைப் புலிகள் உயிரிழந்ததாகவும் அந்த வட்டாரங்களால் தெரிவிக்கப்பட்டது. (இ-164-3-7)

## தமிழ்க் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்)
யர் சுஸந்த மெண்டிஸ், தீவுப்பகுதி கமாண்டர் விஜயசுந்தர மற்றும் பொலீஸ் அதிகாரிகளும்—

ஈ. பி. டி.பி., புளொட, ஈ பி.ஆர் எல்.எவ் ரெலோ அமைப்புகளின் பிரதிநிதிகளும்—கலந்து கொண்டனர்.

ஆயுதங்களுடன் நடமாடக்கூடாது என்றும்—

ஆயுதங்களுடன் நடமாடினால் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும்—இராணுவ அதிகாரி சாந்த கொட்டேகொட மாநாட்டில் தெரிவித்தார். (இ-3)


எமது ஒறிஜினல் வெளியீடு!

கவுண்டமணி, செந்தில் நடித்த
'ராஜா எங்க ராஜா''

★ வெள்ளிக்கிழமைவிரதம்
★ அன்னைவேளாங்கன்னி
★ தீபம்
★ பிராப்தம்
★ இலைக்கனி
★ கப்பலோட்டிய தமிழன்
★ புதிய சகாப்தம்
★ ராஜ ராஜ சோழன்
★ அமைதிப் படை
★ எதிரொலி
★ புதுக் கவிதை
★ வணங்காமுடி
★ தாய் வீடு
★ தம்பிக்கு எந்த ஊரு
CD வெளியீடு
★ எங்கள் கருணை

வீடியோவிமல்
யாழ்ப்பாணம்.
(சி/2878)


## தவறிவிட்டது

இல. 141, நாலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பரராஜசிங்கம் கனகசிங்கம் (ஆசிரியர்) அவர்களின் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, தொழில் அட்டை, சாப்புறுதிச் சான்றிதழ், மோட்டார் சைக்கிள் லைசென்ஸ், மோட்டார் சைக்கிள் திறப்பு, பணம் ரூ 400 ஆகியவை நேற்று யாழ். பெரிய கடைச் சந்தைப் பகுதியில் காணாமற் போய் விட்டன. இவற்றை கண்டெடுத்து மேற்கண்ட விலாசத்தில் ஒப்படைப்போருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ப. கனகசிங்கம்
(சி/2879)


## விம்பம்

யாழ். பல்கலைக்கழக
கலை வட்டமும், நுண்கலைத் துறையும்
இணைந்து நடத்தும்

ஓவியர் ஆசை. இராசையாவின்
ஓவியக் காட்சி

காலம்: 14, 15, 16 மாசி 1998
நேரம்: 10 00 — 4.00 மணி வரை
இடம்: முகாமைத்துவ மண்டபம்,
யாழ். பல்கலைக்கழகம்

புதிய சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்,
23, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(53313)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 13 - 02 - 98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பட்டதாரி உதவி ஆசிரியர் ஆள்சேர்ப்புக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், பெப். 13

வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவையின் மாகாணக் கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் பட்டதாரி உதவி ஆசிரியர்களைச் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய பாடங்களுக்கே பட்டதாரி உதவி ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

இப் பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் "செயலாளர் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு இல. 35, மக்கெய்ஸர் வீதி, உவர் மலை, திருகோணமலை" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் யாழ். மாவட்ட விண்ணப்பதாரிகளின் பிந்திக்கிடைக்கும் விண்ணப்பங்களையும் ஏற்றுக் கொள்ளக் கூடியவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## தடுத்து...

(முதலாம் பக்கத் தொடர்)
பிரிவினர் வெளியிட்டுள்ளனர்.

★ ஜெயராஜ் முகுந்தன் (அல்வாய் தெற்கு) 9-12-97 அல்வாயில் கைது.

★ சின்னத்துரை ரகுராஜா (பொலிகண்டி வடக்கு) 18 - 12 - 97 நீர்வேலியில் கைது.

★ மகாலிங்கம் பிரதாபன் (உடுப்பிட்டி) 24-12-97 பொலிகண்டியில் கைது.

★ கதிரவேல் பாலச்சந்திரன் (நுணாவில்) 3-1-98 யாழ்ப்பாணத்தில் கைது.

★ தங்கவடிவேல் ஞானேஸ்வரி (கரணவாய் வடக்கு) 3-1-98 நெல்லியடியில் கைது.

★ சிவலை தங்கவேலு (கரணவாய் தெற்கு) 3-1-98 நெல்லியடியில் கைது.

★ சின்னத்தம்பி சுரஸ்குமார் (துன்னாலை) 4-1-98 ஜாக்கரையில் கைது.

★ கதிர்காமன் சண்முகநாதன் (வதிரி) 07-01-98 நெல்லியடியில் கைது.

★ மாணிக்கம் புஸ்பராணி (உடுப்பிட்டி) 7-1-98 உடுப்பிட்டியில் கைது.

★ சற்குணலிங்கம் குலமயூரன் (இந்து மகளிர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்) 7-1-98 யாழ்ப்பாணத்தில் கைது.

★ சில்வவிரன் செல்வரத்தினம் (தண்ணீர்தொட்டி வீதி, யாழ்ப்பாணம்) 8-1-98 சின்னக்கடையில் கைது.

★ சண்முகராஜ் பாதபரமேஸ்வரி (கரவை வடக்கு, வல்வெட்டித்துறை) 8-1-98 பொலிகண்டியில் கைது.

★ சண்முகராஜ் பாமா (கரவை வடக்குவல்வெட்டித் துறை) 8-1-98 பொலிகண்டியில் கைது.

★ சூரியன் மகாலிங்கம் (கரணவாய் தெற்கு) 8-1-98 கரணவாயில் கைது. (இ-9)

## மலாயன் ஓய்வூதியம்

நவாலி, பெப் 13

யாழ். மாவட்டத்தில மலேசியா சிங்கப்பூர் பர்மா ஓய்வூதியம் பெறுபவர்களின் ஜனவரி மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் அந்தந்த வங்கிகளுக்கு யாழ். செயலாக ஓய்வூதியப் பிரிவினால் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-100)

## அ'புரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)
னர்.

யாழ் குடாநாட்டில் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடப்படுபவர்கள் மீண்டும் அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜராவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறப்பட்டது.

போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாக ஆஜராக முடியாத நிலையில் உள்ள அவர்கள் மீளக் கைது செய்யப்படுவதாக எடுத்துக் கூறப்பட்டது.

சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பான வழக்குகளை அநுராதபுரம் நீதிமன்றத்தில் இருந்து யாழ் மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றுவதற்கு சட்டமா அதிபர் இணக்கம் தெரிவித்தார் என்று ஈ பி டி பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

பிணையில் விடப்பட்ட சுமார் ஆயிரம் பேர் வரை யாழ். குடாநாட்டில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்)
செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது-

இதன் முழு விவரம் வருமாறு:-

புதன்கிழமை மாலை 5-30 மணியளவில் எமது யாழ். அலுவலகத்தில் இருந்து குருநகர் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த எமது தோழரை வழி மறித்த புளொட் உறுப்பினர்கள் அவரை கடத்திச் செல்ல முற்பட்டனர்.

இதனைக் கண்ணுற்ற பொதுமகன் ஒருவர் எமது அலுவலகத்துக்கு விரைந்து வந்து தெரிவித்தார்.

எமது தோழர்கள் மேலும் 3 மோட்டார் சைக்கிள்களில் அவ்விடத்துக்கு விரைந்து சென்று தோழரை மீட்டுக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்த வேளை புளொட்டின் வேம்படி அலுவலகத்தில் கத்தி பொல்லு, கம்பிகளுடன் திட்டமிட்டு காத்திருந்த புளொட் உறுப்பினர்கள் திரும்பி வந்து கொண்டிருந்த எமதுதோழர்களை படுமோசமாகத்தாக்கி இரத்தக் காயங்களுக்கு உள்ளாக்கினர்.

அத்தொடு அவர்கள் வந்த வாகனங்களையும் அடித்து உடைத்தனர். பின் அந்த [illegible] எமது தோழர்கள் காயமடைந்த தோழர்களை மருத்துவமனைக்கு எடுத்து வந்தனர்.

மக்களின் சுமைகளை தீர்ப்பதாகக் கூறிக் கொண்டு கத்தி, பொல்லுடனும், ஆயுதத்துடனும் காடடுத்தர்பார் நடத்துகிறார்கள் புளொட் அமைப்பினர்.

நேற்றைய சம்பவத்தில் எமது கட்சித் தோழர்கள் விவேகமாவும் புத்திசாலித்தனமாகவும் நடந்து கொண்டதினால் ஏற்பட இருந்த விபரீதங்கள் தடுக்கப்பட்டன.

நாம் ஆயுதம் தாங்கி இருப்பது எமது சுய பாதகாப்புக்கே தவிர எவர்மீதும் எமது அதிகாரத்தை திணிப்பதற்கல்ல. மக்களின் கௌரவமான வாழ்க்கைக்கு எமது தோழர்கள் எவ்வளவு இழப்புகளுக்கு மத்தியிலும் நிதானமாக ஜனநாயகத்தின்பால் நின்று உழைப்பது யாவரும் அறிந்ததே.

அரசியல் தோல்விகள் ஏனைய மனக் கசப்புக்களை முரண்பாடுகளை ஆயுத மூலமோ அல்லது காடைத்தனங்கள் மூலமோ தீர்ப்பதில் எமக்கு ஒரு போதும் உடன்பாடு இடையாது. பேச்சுவார்த்தை, புரிந்துணர்வு. நல்லிணக்க அடிப்படையில் தீர்வுகாண்பதையே நாம் விரும்புகின்றோம்.

புளொட் அமைப்புக்கு உரியபாணியாகிய மாற்று தமிழ் கட்சிகள் மீதான ஆயுத ரீதியான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் என்பன உதாரணமாக அண்மைக் காலத்தில் கூட வவுனியாவில் ரெலோ உறுப்பினர் மீதான தாக்குதல் இன்று, எமது கட்சி உறுப்பினர் மீதான காட்டுமிரண்டித்தனமான தாக்குதல் காடையர் போன்று கத்தி, பொல்லு கம்பிகளுடன் யாழ்ப்பாணத்தின் பிரதான நகரத்தில் புதன் நடத்திய நிகழ்ச்சிகள் மாற்றி அமைக்கப்படவேண்டியதும் திருத்தப்படவேண்டியதுமாகும்.

ஜனநாயக வழி என்ற போர்வைக்குள் இருந்து கொண்டு தமிழ் கட்சிகளுக்கிடையிலான பிரச்சினைகளை ஆயுத மூலமோ, அடாவடித்தனங்கள் மூலமோ தீர்ப்பதில் எமக்கு ஒருபோதும் நம்பிக்கை இல்லை.

புதன் நிகழ்வுகளை நகரத்தின் மத்தியில் நின்று பார்த்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு தெளிவான உண்மைகள் விளங்கி இருக்கும் என்பதில் ஐயம் இல்லை

எம் தோழர்கள் மீதான தாக்குதலை தொடர்ந்து எம்மால் கைது செய்யப்பட்ட புளொட் உறுப்பினர் மூவர் நேற்று பொலீஸிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

புதனன்று இடம்பெற்ற சம்பவங்களின்போது எம்மால் மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்பட்டிருப்பின் எமது கட்சி அம்மக்களிடம் மன்னிப்பை கேட்டுக் கொள்கிறது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்)
கொள்ள வேண்டும்.

மேற்கண்டவாறு ஈ. பி. ஆர் எல் எவ். நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்தில் நிம்மதியான கௌரவமான வாழ்க்கையைத் தேடிக்கொண்டிருக்கையில் இந்த மோதல் ஒரு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இயக்கங்கள் மோதுவதையோ அல்லது அர்த்தமற்ற ஆயுதங்களின் ஆதிக்கத்தையோ மக்கள் விரும்பவில்லை. தமிழ் மக்களின் பொதுவான அபிலாசைகளுக்காக தமிழ்க் கட்சிகள், இயக்கங்கள் அனைத்தும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் என்பதையே மக்கள் விரும்புகிறார்கள்.

பிரச்சினைகள் ஜனநாயக வழி மூலம் தீர்க்கப்படவேண்டும். ஒரேவிதமான தவறான போக்குகள் திரும்பத் திரும்ப நிலவுவதால் அவநம்பிக்கையே மிச்சமாகிறது என்றுள்ளது. [இ]

## வீ ந...

(முதலாம் பக்கத் தொடர்)
உயிரிழந்தவர்களில் ஒருவர் லாண்ட்மாஸ்ரரின் உரிமையாளரான இராசகுட்டி ஜீவரத்தினம் (23 வயது) என்றும்—

அவர் யாழ்ப்பாணம் கொட்டடியில் இருந்து இடம்பெயர்ந்து ஒட்டறுத்தகுளம், மல்லாவியில் வசித்து வந்தவர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களில் மற்றவர் 4 பிள்ளைகளின் தந்தையான எஸ் ஏ. விஜயரத்தின (44 வயது - மாங்குளம்) என்றும் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த மாங்குளத்தைச் சேர்ந்தவரும், 8 பிள்ளைகளின் தந்தையுமான செல்லையா திருச்செல்வம், மாங்குளத்தைச் சேர்ந்தவரும் 9 பிள்ளைகளின் தந்தையுமான இ. இராமசாமி (43 வயது) ஆகியோர் மல்லாவி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இருவர் காயம் எதுவும் இன்றித் தப்பி ஓடி வந்து விட்டனர்.

லாண்ட்மாஸ்ரர் சேதமடைந்துள்ளது. (இ-3)